Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

MONDAY, JUNE 17 2024

திங்கட்கிழமை ஜூன் 17, 2024 | ஒளி: 09 கதிர் 274 | பக்கம்:07 | நகரப்பதிப்பு★ | FREE


## “குறைப்பது கடினம்”



உலக சந்தையில் மசகு எண்ணெய் விலை குறைவடைந்துள்ள போதிலும், நாட்டில் எரிபொருட்களின் விலைகளை உடனடியாக குறைப்பது கடினமென மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கொள்வனவு

தொடர்ச்சி P2




தமிழ் பொது வேட்பாளர்

# “இன்றும் முடிவில்லை”



## சுமந்திரன் தெரிவிப்பு; சிவாஜிலிங்கம் பழக்கதோசம் என்கிறார்

**மும்முனைப் போட்டி ஒன்று ஏற்படுமாக இருந்தால், தமிழ் பேசுகின்ற மக்களின் வாக்குப் பலம் பிரதானமாக இருக்கும். இதனை நாம் உதாசினம் செய்யக்கூடாது. மிகவும் கவனமாக எமது பேரம் பேசுதலை நடத்தவேண்டும்**

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் நிறுத்தும் விடயத்தில் ஆதரவு வழங்குவதில் தமிழரசுக் கட்சியின் மத்தியக் குழுவில் இன்றும் முடிவுகள் எடுக்கப்படவில்லை என தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ சுமந்திரன், பழக்கதோசத்தில் சிவாஜிலிங்கம் போட்டியிடுவார் என்றார்.

தமிழரசுக் கட்சியின் மத்தியக் குழு கூட்டம் வவுனியா இரண்டாம் குறுக்கு தெருவில் அமைந்துள்ள தனியார் விருந்தினர் விடுதியில் ஞாயிற்றுக்கிழமை (16) இடம்பெற்றது. அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேர்தலில் வேட்பாளர்கள் யார் என்று இன்னமும் தெரியாது. அவர்களுடைய தேர்தல் அறிக்கைகள் இன்னமும் வெளிப்படுத்தப்படவில்லை. அதன்பின்னர் தீர்மானிப்பதாகவே முடிவெடுத்திருந்தோம் என்றார். அத்துடன், தமிழ் பொது வேட்பாளர் விடயத்தில் உரிய நேரத்தில் தீர்மானம் எடுப்போம் என்றார்.

தொடர்ச்சி P2

## மனைவியுடன் நடனமாடிய இளைஞன் படுகொலை



இசை நிகழ்ச்சியின் போது இளைஞர் ஒருவர் கழுத்தை அறுத்து கொலை செய்யப்பட்டுள்ளதாக களுத்துறை தெற்கு பொலிஸார் தெரிவித்தனர்.

தொடங்கொட, ஜன் உதான கிராமத்தைச் சேர்ந்த 20 வயதுடைய இளைஞரே இவ்வாறு கொல்லப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தொடர்ச்சி P2

## “கால், அரை, முக்கால் கேட்க தேவையில்லை”

■ எஸ்.நிதர்ஷன்

தென்னிலங்கை அரசாங்கமாக இருக்கலாம் இந்திய அரசாங்கமாக இருக்கலாம் அல்லது சர்வதேச சமூகமாக இருக்கலாம் இவர்கள் அனைவரும் தங்களின் நலன்களிலேயே அக்கறையாக இருப்பார்கள் எங்கள் நலனில் அக்கறையாக இருக்க மாட்டார்கள் என தெரிவித்துள்ள ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா, நாங்கள் அப்படிக் கேட்க வேண்டிய அவசியம் இல்லை என்றார். யாழிலுள்ள தமது கட்சி அலுவலகத்தில் ஞாயிற்றுக்கிழமை (16) நடத்திய ஊடக சந்திப்பில்,



தொடர்ச்சி P2

## “மன்னார் மீனவ மக்களின் பிரச்சினைகளை பாருங்கள்”

### ஜனாதிபதியிடம் மன்னார் ஆயர் எடுத்துரைப்பு

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, மன்னார் மறை மாவட்ட ஆயர் அதி வணக்கத்திற்குரிய கலாநிதி மேதகு இமானுவேல் பெர்னாண்டவை மன்னார் ஆயர் இல்லத்தில் ஞாயிற்றுக்கிழமை(16) சந்தித்தார்.



தொடர்ச்சி P2

## ரஜினியை சந்தித்தார் செந்தில் தொண்டமான்

இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்தை விஜயவாடாவில் சந்தித்தார்.

அந்த சந்திப்பின் போது, இலங்கையில் உள்ள தோட்ட சமூகத்தின் 200ஆவது ஆண்டுக்கான நினைவு முத்திரையை சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்துக்கு வழங்கி வைத்தார்.



## நெல்லிக்குளம் மலைக்கு நீதவான் கள விஜயம்

■ தீஷான் அஹமட்

மூதூர்-சேனையூர் நெல்லிக்குளம் மலை உடைக்கும் இடத்தினை மூதூர் நீதிவான் நீதிமன்ற நீதவான் தஸ்னீம் பௌசான் சனிக்கிழமை (15) பார்வையிட்டார்.

சேனையூர் கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட நெல்லிக்குள மலை பிரதேசத்தில் மலை உடைப்பதால் தமக்கு பாதிப்புள்ளதாக கல்மலை உடைக்கும் போது எதிர்ப்பு



தொடர்ச்சி P2

## “பொது வேட்பாளர் பாதிப்பை ஏற்படுத்தும்”

■ எஸ்.நிதர்ஷன்

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் பொது வேட்பாளரை நிறுத்துவது தொடர்பில் சிலர் பேசி வருகின்றனர். அதற்கான முயற்சிகளும் எடுக்கப்பட்டு வருவதாகவும் கூறப்படுகிறது. என்னைப் பொறுத்த வரையில் பொது வேட்பாளர் என்பது அவசியமில்லை என்றே நினைக்கிறேன். அந்த முயற்சியானது தமிழ் மக்களுக்குப் பயனற்றது மாத்திரமல்ல அது பாதிப்பையே ஏற்படுத்தும் என ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

**“ பிரபாகரன் இல்லாத சூழலில் கட்டுக் கழன்று உள்ளதால் ஒவ்வொன்றும் ஒவ்வொரு திசைக்கு உருண்டோடியது போன்று சிதறுப்பட்டு இருக்கின்றனர்**

## “ரணிலே தலைவர்; சஜித், அனுர மறைமுகமாக ஏற்றுள்ளனர்”

நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்து சிக்கல்கள் உருவாகியுள்ள இவ்வேளையில் மேலும் பல சோதனைகளுக்குச் சென்று இன்னொரு தடவை கேட்டு சாப்பிடுவதா என்பதை மக்கள் தீர்மானிக்க வேண்டும் என நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க வலியுறுத்துகின்றார்.



தொடர்ச்சி P2

‘உறுமய’ திட்டத்தின் கீழ்

## மன்னாரில் 5,000 நிலப் பத்திரங்கள் வழங்கி வைப்பு

‘மரபுரிமை’ வேலைத்திட்டத்தின் மூலம் மக்களின் காணி உரிமையைப் பெற்றுக்கொள்வதன் மூலம் அவர்களின் சொத்து மதிப்பை அதிகரிக்க முடியும் என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

பொருளாதார நெருக்கடி மற்றும் கொரோனா தொற்று காரணமாக வீழ்ச்சியடைந்த சொத்துக்களின் பெறுமதி, நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்தும் ஆற்றல் கொண்ட ‘மரபுரிமை’ வேலைத் திட்டத்தினால் மீண்டும் உயர்ந்துள்ளதாக ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

மன்னார் மாவட்ட மக்களுக்கு 20 இலட்சம் இலவச காணி பத்திரம் ‘மரபுரிமை’ வழங்கும் தேசிய வேலைத்திட்டத்தின் கீழ், காணி உறுதிகள் வழங்கும் நிகழ்வில் ஞாயிற்றுக்கிழமை (16) மன்னார் நகர மண்டப கேட்போர் கூடத்தில் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.




தொடர்ச்சி P2

## கரப்பந்தாட்டத்தில் காடையர் குழு அட்டகாசம்

■ நிதர்ஷன் விநோத்

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மீசாலை, தெருவாரத்தில் உள்ள விளையாட்டுக் கழகத்தின் மைதானத்தில் சனிக்கிழமை(15) மாலை 5

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# “இன்றும் முடிவில்லை”

அத்துடன், தங்களை வேட்பாளர்களாக அறிவித்துள்ள இருவர் தமிழரசுக் கட்சியின் தலைமை காரியாலத்திற்கு வந்து எங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர். இது ஓர் ஆரம்பக்கட்ட பேச்சுவார்த்தை. நாங்கள் தொடர்ந்தும் இவ்வாறானவர்களுடன் பேசுவோம். ரணில் விக்ரமசிங்க தன்னை வேட்பாளராக அறிவித்தால் அவரோடும் பேசுவோம்.

முடிவு எதுவும் இதுவரை எடுக்கப்படவில்லை. ஆனால் இதுவரை அதிகார பகிர்வு தொடர்பாகப் பொதுவெளியில் சொல்லக் கூச்சப்பட்டுக்கொண்டிருந்த வேட்பாளர்கள் போட்டிப்போட்டுக் கொண்டு 13ஆம் திருத்தத்தினை முழுமையாக அமுல் படுத்துவோம் என்று சொல்லத் தலைப்பட்டுள்ளனர்.

அது முழுமையான தீர்வல்ல அதனை நாம் ஏற்கவில்லை. ஆனால், அரசியலமைப்பில் உள்ளதையாவது அமுல்படுத்த வேண்டும் என்பதை நாம் சொல்லியிருக்கின்றோம். எனவே, அந்த பேச்சுவார்த்தைகள் ஆராக்கியமாக இருந்தது. அவர்கள் சொன்னதைச் செய்வார்களா? என்ற சந்தேகம் அனைவருக்கும் இருக்கின்றது.

மும்முனைப் போட்டி ஒன்று ஏற்படுமாக இருந்தால், தமிழ் பேசுகின்ற மக்களின் வாக்குப் பலம் பிரதானமாக இருக்கும். இதனை நாம் உதாசீனம் செய்யக்கூடாது. மிகவும் கவனமாக எமது பேரம் பேசுதலை நடத்தவேண்டும். சந்தர்ப்பத்தை சரியாக உபயோகப்படுத்த வேண்டும் என்ற கருத்தோடு நாங்கள் இருக்கின்றோம்.

தமிழ் பொது வேட்பாளர் விடயம் தொடர்பாகக் கடந்த மத்தியக் குழு கூட்டத்திலேயே பலர் எதிரான கருத்துக்களை தெரிவித்திருந்தனர்.

எனவே இன்று அதைப்பற்றிப் பேசவில்லை. மக்களது கருத்துக்களையும் அறிந்து தனிப்பட்ட கருத்துக்களை சொல்வதற்கான சுயாதீனம் அனைத்து கட்சி உறுப்பினர்களுக்கும் கொடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், சிவாஜிலிங்கம் வழமையாகவே நிற்பவர். பழக்கதோசத்தில் அவர் நிற்கலாம் அதில் எனக்குப் பிரச்சினையில்லை என்றார்.

## “மன்னார் மீனவ மக்களின் பிரச்சினைகளை பாருங்கள்”

பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்பதற்காக ஜனாதிபதி முன்னெடுத்துவரும் பொருளாதார மறுசீரமைப்பு முயற்சிகளைப் பாராட்டிய மன்னார் ஆயர், மன்னார் மாவட்ட அபிவிருத்தித் திட்டம் குறித்தும் ஜனாதிபதியுடன் கலந்துரையாடினார்.

மன்னார் - பருத்தித்துறை மற்றும் முல்லைத்தீவு மீள் புதுப்பிக்கத்தக்க வலுசக்தி மையமாக அபிவிருத்தி செய்யும் திட்டம் குறித்து இதன்போது கலந்தாலோசிக்கப்பட்டது.

அத்துடன், சுற்றாடல் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு அந்த அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுப்பது குறித்தும் ஆலோசிக்கப்பட்டது. மேலதிக வலுசக்தியை இந்தியாவுக்கு விற்பனை செய்வது குறித்துப் பேசப்பட்டு வருவதாகவும், அதற்காக இந்தியா - இலங்கைக்கு இடையிலான குழாய் இணைப்பொன்றைக் கட்டமைப்பது தொடர்பிலான சாத்தியக்கூறு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதன்போது தெரிவித்தார்.

அத்துடன், எதிர்வரும் நாட்களில் இடம்பெறவிருக்கும் இந்திய வெளிவிவகார அமைச்சரின் சுற்றுப் பயணத்தின் போது அது குறித்து மேலும் கலந்துரையாட இருப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

அதேபோல் இந்தியா - இலங்கைக்கு இடையில் தரை மார்க்க இணைப்பை ஏற்படுத்துவதற்கான சாத்தியக்கூறு ஆய்வுகள் முழுமையாக மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும், அது குறித்து எதிர்வரும் நாட்களில் ஆராயவிருப்பதாகவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

அதேபோல மன்னாரை சுற்றுலா மத்தியஸ்தளமாக மாற்றுவதற்கான சாத்தியங்கள் குறித்தும், கப்பல் சுற்றுலா தளத்தை அபிவிருத்தி செய்வதற்கான இயலுமை குறித்து இங்குப் பேசப்பட்டது. அதன்படி இந்த அனைத்து துறைகளின் கீழும் மன்னார் மாவட்டம் எதிர்காலத்தில் பரந்த அபிவிருத்தியை எட்டும் என்றும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மேலும் சுட்டிக்காட்டினார்.

மன்னார் மீனவ மக்களின் பிரச்சினைகள் குறித்து கவனம் செலுத்துமாறு இதன்போது மன்னார் மறை மாவட்ட ஆயர் ஜனாதிபதியிடம் கேட்டுக்கொண்டார்.

## மன்னாரில் 5,000 நிலப்...

இந்த வேலைத் திட்டத்தின் கீழ் மன்னார் மாவட்ட மக்களுக்கு 5000 காணி உறுதிப்பத்திரங்கள் வழங்கப்படவுள்ளதுடன், 442 காணி உறுதிப்பத்திரங்கள் இன்று ஜனாதிபதியினால் அடையாளமாக வழங்கி வைக்கப்பட்டது.

மன்னார் மாவட்ட விவசாயிகளுக்கு உரம் வழங்குவதற்கான பணத்தை வழங்குவது தொடர்பான காசோலைகளையும் ஜனாதிபதி அவர்கள் வழங்கி வைத்தார்.

கடந்த மோசமான காலநிலை காரணமாக மன்னார் மாவட்டத்தில் அழிவடைந்த விவசாய பயிர்களுக்கு விவசாய காப்புறுதி நட்டஈடு வழங்கப்பட்டதுடன் அப்பகுதி மீனவர்களுக்கு மீன்பிடி உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்கு நிதி ஒதுக்கீடும் வழங்கப்பட்டது.

மன்னார் மாவட்டச் செயலாளர் கே. கனகேஸ்வரன் அவர்கள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு நினைவுப் பரிசையும் வழங்கி வைத்தார்.

## நெல்லிக்குளம் மலைக்கு...

தெரிவித்த ஒன்பது பேர், செவ்வாய்க்கிழமை(11) அன்று சம்பூர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர்.

சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட அவர்கள், மூதூர் நீதிவான் நீதிமன்றில், புதன்கிழமை (12) முன்னிறுத்தப்பட்டதையடுத்து, அவர்கள் அனைவரும் சொந்தப் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார்கள்.

இது தொடர்பான வழக்கை மூதூர் நீதிமன்றில் சம்பூர் பொலிஸார் தாக்கல் செய்தார்கள். சம்பவ இடத்திற்கு 15.06.2024 அன்று விஜயம் மேற்கொண்டு ஆராய்வதாகவும் நீதவான் தெரிவித்திருந்தார். அந்த வகையில் குறிப்பிட்ட இடத்திற்கு மூதூர் நீதிமன்ற நீதிபதி தஸ்னீம் பௌசான் விஜயம் மேற்கொண்டு பார்வையிட்டுச் சென்றார்.

குறித்த மலை உடைப்பின் காரணமாக அருகில் உள்ள விவசாயம்,போக்குவரத்து, கால்நடை வளர்ப்பு போன்றவற்றுக்குப் பாதிப்பிருப்பதாகவும் கிராமத்தவர் ஒருவர் தெரிவித்தார்.

இங்கு வருகை தந்த சிரேஷ்ட சட்டத்தரணி தங்கமுத்து ஜயசிங்கம் கருத்துத் தெரிவிக்கையில்

நெல்லிக்குள மலையைச் சுற்றி காணிகள் இருக்கின்றன. இங்கு கல் உடைப்பதற்கு எந்த வகையில் அனுமதி வழங்கப்பட்டது என்று எமக்குத் தெரியாது. நீதிமன்றத்தில் இந்த விடயம் இருப்பதால் எமக்குக் கருத்துச் சொல்ல முடியாதுள்ளது. இதனால் இக்கிராம மக்கள் கஷ்டப்படுகிறார்கள் துன்பப்படுகிறார்கள் என்று மாத்திரம் எமக்கு தெரிகின்றது என்றார். தற்போது இந்த இடத்தினை நீதவான் பார்வையிட்டுச் சென்றதினால் 20ஆம் திகதி எமக்கு நல்லத்தீர்ப்பு கிடைக்கும் என்று நாம் நம்புகிறோம் என்றும் குறிப்பிட்டார்.

## “பொது வேட்பாளர் பாதிப்பை...

யாழிலுள்ள அவரது கட்சித் தலைமை அலுவலகத்தில் ஞாயிற்றுக்கிழமை (16) நடத்திய ஊடக சந்திப்பின் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது..

உண்மையில் தமிழ் மக்களுக்கு நீண்ட காலமாக இருந்து வருகின்ற பிரச்சினைகளைத் தீராப் பிரச்சினைகளாக வைத்திருப்பதற்கான ஒரு முயற்சியாகவே இதனை நான் பார்க்கிறேன். இவர்கள் எல்லோரையும் உருளைக் கிழங்கு மூட்டையில் கட்டி வைத்திருந்தது போன்று ஒன்றாகக் கட்டி வைத்திருந்தாலும் இன்றைக்குப் பிரபாகரன் இல்லாத சூழலில் கட்டுக் கழன்று உள்ளதால் ஒவ்வொன்றும் ஒவ்வொரு திசைக்கு உருண்டோடியது போன்று சிதறுப்பட்டு இருக்கின்றனர்.

இவ்வாறான நிலைமையில் இவர்களுக்குள் ஐக்கியம் ஒற்றுமை எங்கே இருக்கிறது. பலவருடமாக இப்படிக் கட்டி வைத்து என்ன கிடைத்தது. அழிவைக் கட்டுப்படுத்த முடிந்ததா? அல்லலது முன்னேற்றம் ஏதும் வந்ததா? ஒன்றும் இல்லாத நிலையில், தற்போது தேர்தல் வருகிறபடியால் மீண்டும் அந்த என்றும் பற்றிப் பேசுகின்றனர். எம்மைப் பொறுத்தவரையில் இவர்களைப் போன்று அல்லாமல் கடந்த காலங்களில் நாம் மக்களுக்கு எதைக் கூறினோமோ அதனையே இப்போதும் கூறுகிறோம். ஆக, சொல்வதை செய்வதும் செய்வதைச் சொல்வதும் தான் நான் என்றார்.

## கரப்பந்தாட்டத்தில்...

மணியளவில் வாள் வெட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில், சிவகுமார் ராகுலன் 25 வயதான இளைஞன் படுகாயங்களுக்கு உள்ளாகி, சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மீசாலையிலுள்ள கைப்பந்து விளையாட்டுக் கழகமொன்று, கரப் பந்து சுற்றுப் போட்டி நடத்தி வருகிறது. இச்சுற்றுப் போட்டியின் இறுதிச் சுற்று சனிக்கிழமை(15) இரவு 7:30 மணிக்கு ஆரம்பமாக இருந்தது.

இந்நிலையில் மாலை 5 மணியளவில் 12 பேர் கொண்ட காடையர் கூட்டமொன்று மதுபோதையில் வாள் மற்றும் பொல்லுகளுடன் உட்புகுந்து அங்கு நின்றிருந்தவர்கள் மீதும், வீதியால் பயணித்தவர்கள் மீதும் தாக்குதல் நடாத்தியுள்ளனர்.

இதனை அவதானித்த ஊரவர்கள் மற்றும் விளையாட்டுக் கழக வீரர்கள் தாக்குதல் நடாத்திய காடையர் கூட்டத்தைச் சுற்றிவளைத்து, காடையர்களை நையப்புடைத்து நால்வரை மடக்கிப் பிடித்துக் கட்டி வைத்தனர்.

ஏனையவர்கள் தப்பித்துச் சென்றுள்ளனர். அவர்களைத் துரத்திச் சென்றபோதும் காடையர்கள் கூட்டம் தப்பித்துச் சென்றுள்ளனர்.

ஊரவர்களால் மடக்கிப் பிடிக்கப்பட்ட நால்வரையும் மின் கம்பத்துடன் கட்டி வைத்து விட்டு, கொடிகாமம் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து, சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் நான்கு காடையர்களையும் கைது செய்துள்ளனர்.

தாக்குதலுக்குப் பயன்படுத்தப்பட்ட வாள் மற்றும் கத்தி என்பனவும் மீட்கப்பட்டுள்ளதாகவும்

கைதாகிய நால்வரும் 17 மற்றும் 18 வயதுகளையுடையவர்கள் என்றும் தாக்குதல் நடத்த வந்த ஏனையோரும் குறித்த வயதினையுடைவர்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## “கால், அரை, முக்கால் கேட்க தேவையில்லை”

13ஆவது திருத்தம் தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் பிரதான வேட்பாளர்கள், வடக்கு மாகாணத்துக்கு வந்து சென்றிருக்கின்றனர். அவர்கள் வந்து என்ன பேசியிருக்கின்றனர் என்பதும் ஏனைய தமிழ்க் கட்சியினர் என்ன கேட்டிருக்கின்றனர் என்பதும் உங்களுக்குத் தெரியும்.

குறிப்பாக இங்குள்ள தமிழ்க் கட்சியினர் அவர்களிடத்தில், கால்வாசி தாறியா, அரைவாசி தாறியா, முக்கால்வாசி தாறியா, என்று கேட்டிருக்கின்றனர். ஆனால் நாங்கள் அப்படிக் கேட்க வேண்டிய அவசியம் இல்லை.

உண்மையில் தமிழ் மக்களின் போராட்டங்கள் தியாகங்களாலே இலங்கை- இந்திய ஒப்பந்தம் ஊடாகவே இந்த 13 ஆவது திருத்தம் கொண்டு வரப்பட்டது.

அத் திருத்தம் நமக்குக் கிடைக்கின்ற போது அரைவாசி, காவாசி, முக்கால்வாசி என்றெல்லாம் இருக்கவில்லை. அது முழுமையாகத் தான் இருந்தது என்றார்.

அதனை நடைமுறைப்படுத்துகிற காலத்தில் இந்தியா தனது படைகளையும் அனுப்பியிருந்து. இவ்வாறு ஒருபக்கம் தன்னுடைய படைகளை அனுப்பிய அதேநேரத்தில் இராஜதந்திர ரீதியாகவும் நடவடிக்கைகளை எடுத்திருந்தது.

ஆனால், துரதிஷ்டவசமாக பிரச்சனைகள் தீர்க்க விரும்பாதவர்கள் அதிலே ஒன்றுமில்லை என்று அன்றைக்குக் கூறி விட்டார்கள். அது மாத்திரமல்லாமல், தும்புத்தடியால் கூட தொடமாட்டோம் என்றும் கூறியிருந்தனர். அன்று இவ்வாறு கூறியவர்கள் இன்று என்ன கேட்கின்றனர் என்று பாருங்கள்.

இங்கு ஒரு விடயத்தை நான் கூறி வைக்க வேண்டும். அதாவது நீண்ட காலத்திற்குப் பின்னர் என்னுடைய நண்பர் சுரேஷ் பிரேமச்சந்திரனும் நானும் ஒரு நிகழ்வில் அருகருகே அமர்ந்திருந்து உரையாடும் சந்தர்ப்பமொன்று ஏற்பட்டிருந்தது.

அப்பொழுது அன்றைக்கே இலங்கை- இந்திய ஒப்பந்தத்தை நாம் ஏற்று இருக்கலாம் என்றும் நாங்கள் எங்கேயோ சென்று இருக்கலாம் எனவும் கூறியிருந்தேன். அதற்கு அவருடைய பதில் என்னுடைய கருத்தை அவர் ஏற்றுக் கொள்வதாகவே இருந்தது.

உண்மையில் இதனையே அவர் மனசுக்குள்ளே அப்படி நினைத்துக் கொண்டிருக்கிறார் என்று நினைக்கிறேன். அதனைச் செய்ய வேண்டிய நேரத்தில் அனைவருமாகச் செய்யாமல் நாங்கள் எல்லாம் கோட்டை விட்டுவிட்டது என்பது எங்களுக்கு அசிங்கம் அல்லது அவமானம் என்று தான் நினைக்கிறேன்.

இன்றைக்கு அந்த சட்டம் கொண்டு வரப்பட்ட போது உண்மையாகவே இதில் தவறிழைத்தது இலங்கையோ இந்திய அரசு அல்லது சர்வதேசமோ அல்ல. அதில், தமிழர் தரப்பு தான் முழுமையாகத் தவறிழைத்துக் கோட்டைவிட்டிருக்கிறோம்.

இலங்கை இந்தியா ஒப்பந்தத்தோடு தென் இலங்கை ஆட்சியாளர்களின் குணாதிசய ரீதியான மாற்றங்கள் அன்று ஏற்பட்டிருந்தது. ஆனால், அந்த வாய்ப்பை நாம் பயன்படுத்தத் தவறி விட்டோம். எங்களுக்கு வினை விதைத்தது நாமே தானே உரிய வேறு யாரும் அல்ல என்றார்.

ஆகத் தென்னிலங்கை அரசாங்கமாக இருக்கலாம் இந்திய அரசாங்கமாக இருக்கலாம் அல்லது சர்வதேச சமூகமாக இருக்கலாம் இவர்கள் அனைவரும் தங்களின் நலன்களிலேயே அக்கறையாக இருப்பார்கள் எங்கள் நலனில் அக்கறையாக இருக்க மாட்டார்கள். இன்று பாலஸ்தீனத்திலும் காசாவிலும் சர்வேச சமூகம் என்ன செய்து கொண்டிருக்கிறது. அந்த போரில் அழிவு முற்றுப்பெறும் வரை தொடர்ந்தும் பார்த்துக் கொண்டிருக்கிறது. அதுதான் நமக்கும் நடந்து முடிந்திருக்கிறது. எனவே இவர்களை நம்பிக் கொண்டிருப்பதை விடுத்து நம் எமது பிரச்சனைகளை எவ்வாறு தீர்த்துக் கொள்ளலாம் என சிந்தித்து அதற்கேற்ற வகையில் செயற்பட வேண்டியது அவசியம் என்றார்.

## “குறைப்பது கடினம்”

நடவடிக்கைகளின் பிரகாரம், இலங்கையில் எரிபொருள் விலை குறைப்பு முறையாக மேற்கொள்ளப்பட வேண்டுமென அதன் செயலாளர் சுலக்ஷன ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

சிங்கப்பூர் வர்த்தகக் குறியீட்டின்படி, சுத்திகரிக்கப்பட்ட எரிபொருள் நாட்டிற்கு இறக்குமதி செய்யப்படுகிறது. இதன்படி, அங்குத் தீர்மானிக்கப்படும் விலைகளுக்கு அமைய இலங்கையில் எரிபொருள் விநியோகிக்கப்பட வேண்டுமெனவும் செயலாளர் குறிப்பிட்டுள்ளார். நாட்டின் மொத்தத் தேவையில் சுமார் 35 சதவீதமான மசகு எண்ணெய் இறக்குமதி செய்யப்பட்டுச் சுத்திகரிக்கப்படுவதால், உலக சந்தை விலைகளுக்கு அமைவாகச் சுத்திகரிக்கப்பட்ட எரிபொருளின் விலைகளில் திருத்தம் மேற்கொள்ள முடியாதெனவும் சுலக்ஷன ஜயவர்தன கூறினார். எவ்வாறாயினும், கடந்த செப்டம்பர் மாதத்துடன் ஒப்பிடுகையில் மசகு எண்ணெய் விலை 27 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளதாக பேராதனை பல்கலைக்கழகத்தின் பொருளியல் பிரிவின் பேராசிரியர் வசந்த அத்துகோரல தெரிவித்துள்ளார்.

## “ரணிலே தலைவர்; சஜித், அனுர மறைமுகமாக...

தற்போதைய ஜனாதிபதியின் வேலைத் திட்டத்தைத் தொடர்வதன் மூலம் நாட்டை பொருளாதார நெருக்கடியிலிருந்து மீளச்செய்ய முடியும் எனவும், பரிசோதனை முயற்சி ஒன்றைச் செய்து பார்க்கப் பொருத்தமான சூழல் நாட்டில் இல்லை என்பதால் ரணில் விக்ரமசிங்கவை மீண்டும் ஜனாதிபதியாகப் பதவியில் அமர்த்துவதைத் தவிர வேறு வழியில்லை எனவும் ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர்கள் மறைமுகமாக ஏற்றுக்கொண்டுள்ளனர்.

மினுவாங்கொடை பிரதேசத்தில் ஞாயிற்றுக்கிழமை (16) இடம்பெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டதன் பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஊடகவியலாளர்கள் அமைச்சரிடம் கேட்ட கேள்விகளும் அதற்கு அவர் அளித்த பதில்களும் வருமாறு.

கேள்வி - அமைச்சரே, தேர்தல் நடக்குமா?

பதில் - ஆம், நிச்சயமாகத் தேர்தல் நடத்தப்பட வேண்டும். அரசியலமைப்பு ரீதியாக இந்த வருடமே ஜனாதிபதி தேர்தல் நடத்தப்பட வேண்டும்.


கேள்வி - தேர்தல் இல்லை போல் தான் எங்களுக்குத் தெரிகிறது. இது பொய்ச் சொல்லும் செயலா?

பதில் - அதுதான் இந்த நாட்டில் நடந்துள்ளது. பொய்கள் ஆட்சி செய்ய முயல்கின்றன. சில அரசியல் கட்சிகள் பொய் சொல்லி, உலக நாடுகள் முழுவதும் சுற்றி திரிந்து மக்களுக்கு பொய் கயிறுகளைக் கொடுத்து புதிய படங்களை உருவாக்குகின்றனர். அதுதான் இந்த நாட்டில் தினமும் நடக்கிறது. அதனால் தான் இந்த நாடு பின்னோக்கி சென்றுள்ளது என்றார்.

## மனைவியுடன் நடனமாடிய இளைஞன் படுகொலை

சந்தேக நபர், உள்ளூர் பெண்ணை திருமணம் செய்து கொண்டதாகவும், சில நாட்களுக்கு முன்பு அவரை விட்டுப் பிரிந்து அவள் தனியாக வசித்து வந்ததாகவும் கூறப்படுகிறது. களுத்துறை, கமகொட பிரதேசத்தில் இடம்பெற்ற இசை நிகழ்ச்சியைப் பார்வையிட வந்த குறித்த யுவதி, தான் பணிபுரிந்த ஆடை தொழிற்சாலையில் இளைஞர் ஒருவருடன் நடனமாடியுள்ளார். அதனை அவதானித்த கணவன், அந்த இளைஞனின் கழுத்தை அறுத்துக் கொன்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# “வாழ்வதற்கு பழகிக்கொள்ள வேண்டும்”



ஆன்மிக மற்றும் உலக வெற்றியை அடைய, மனிதன் சுயநலத்தை விட்டொழித்து, தியாகம் மற்றும் நல்லிணக்கத்துடன் வாழ்வதற்கு பழகிக்கொள்ள வேண்டும் என்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தனது ஹஜ் பெருநாள் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

மேலும், ஒவ்வோர் ஆண்டும் முஸ்லிம்கள் அந்த உன்னத நோக்கத்தின் அடிப்படையில் ஹஜ் பெருநாளைக் கொண்டாடுகிறார்கள்.

உலகம் முழுவதிலும் இருந்து முஸ்லிம்கள் அனைவரும் ஒரே நோக்கத்துடன் ஒரே புனிதத் தலத்தில் கூடி, மனிதகுலத்தின் எதிர்பார்ப்பான சமூகத்தின் ஒருமைப்பாட்டிற்காக இத்தினத்தில் பிரார்த்தனை செய்கிறார்கள்.

உலக மக்கள் அனைவருக்கும் சமத்துவம் மற்றும் சகோதரத்துவ உணர்வுகளை விதைக்கும் ஹஜ் கொண்டாட்டம், உலக அமைதிக்கான சிறந்த செய்தியையும் தரும் என்பது எனது எதிர்பார்ப்பாகும்.

மனிதகுலத்தின் அபிலாஷைகளை வென்றெடுப்பதற்காக அனைவரும் ஒரே இலக்கில் ஒன்றுபடும் ஹஜ்ஜுப் பெருநாளை மகிழ்ச்சியுடன் கொண்டாடுவதற்கு இலங்கை மற்றும் உலக முஸ்லிம்கள் அனைவருக்கும் தனது நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்றும் தெரிவித்துள்ளார்.

# “நாட்டை கட்டியெழுப்பும் பணிகளில் ஈடுபட்டுவோம்”



உலகெங்கிலும் உள்ள முஸ்லிம்களின் மிக முக்கியமான கலாசார மற்றும் மதப் பண்டிகையாகக் கருதப்படும் ஈதுல் அல்ஹா பெருநாளை முன்னிட்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்ளும் இத் தருணத்தில், அதன் முக்கிய விழுமியங்களைப் பற்றி நினைவில் கொள்வது சாலச் சிறந்தது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

மேலும், வரலாற்றின் தொடக்கத்திலிருந்தே, மக்கள் பல்வேறு மத தியாகங்களுக்காகக் கூட்டாகக் கூடினர், அதில் தங்கள் சொந்த மதத்துடன் தொடர்புடைய மரபுகள் பாதுகாக்கப்பட்டு அவற்றுக்கிடையே தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டனர். இஸ்லாத்தில் புனிய ஹஜ் யாத்திரையும் அவ்வாறானதொன்றாகும்.

இஸ்லாத்தின் ஐந்து பெரும் கடமைகளில் ஐந்தாவது கடமையாகக் கருதப்படும் ஹஜ் யாத்திரை இறைவன் மீதான பக்தி மற்றும் நம்பிக்கையை மீண்டும் மீண்டும் உறுதிப்படுத்துவதாகும். அந்த நம்பிக்கையின் காரணமாக, உலகெங்கிலும் உள்ள மில்லியன் கணக்கான இஸ்லாமியர்கள் ஒரே நோக்கத்துடன் ஒரே நேரத்தில் புனித மக்காவில் ஒன்று கூடி, மனிதகுலத்தின் எதிர்பார்ப்பான சகோதரத்துவ கூட்டு மதிப்பைப் போற்றுகிறார்கள். மேலும் இஸ்லாத்தின் தத்துவத்தின் அடிப்படையில் மனிதகுலத்தை போற்றும் ஒரு சந்தர்ப்பமாகவும் இந்த ஈதுல் அல்ஹா பெருநாளைக் கருதலாம்.

இது சமூக நல்லிணக்கத்தின் பெருமையை உலகிற்கு எடுத்துரைக்கும் ஒரு முக்கியமானதும் தனித்துவமானதுமான தியாகத் திருநாளாகும். மதத்தின் மூலம், மனித சமுதாயம் மனித நேயத்தால் முழுமையடைந்து நல்ல சமுதாயத்தை உருவாக்கும் என்பது நம்பிக்கை. ஒவ்வொரு மதத்திலும் கலாசாரத்திலும் நடக்கும் இத்தகைய கொண்டாட்டங்கள் மூலம் அந்த நல்ல நோக்கம் நினைவு கூரப்படுகின்றது. எனவே, பல்வேறு பேதங்கள் மூலம் மனித இனத்திற்கிடையே மோதல்களை உருவாக்குவதற்குப் பதிலாக, பரஸ்பரம் ஒன்றுக்கொன்று தொடர்புடையவர்களாகவும் சகோதர வாஞ்சையுடன் நேசிக்க வேண்டியதன் முக்கியத்துவத்தையும் இது நமக்குச் சுட்டிக் காட்டுகிறது.

வங்குரோத்தாகியுள்ள நம் நாட்டிற்கும் இது ஒரு சிறந்த உதாரணமாக நான் பார்க்கிறேன்.

இனம், மதம், சாதி, குலம், கட்சி, அந்தஸ்து என்ற பேதமின்றி அனைவரும் ஒன்றிணைந்து நாட்டை கட்டியெழுப்பும் பணிகளில் ஈடுபட்டு நமது நாட்டை உலகில் முதலாவது இடத்துக்குக் கொண்டு செல்லும் பயணத்திற்கு நாம் ஒத்துழைப்பு வழங்குவோம். அதற்காக அனைவரும் ஒரே புரிந்துணர்வுடன் இந்த தியாகத் திருநாளான ஈதுல் அல்ஹா பெருநாளைச் சகோதரத்துவத்துடன் கொண்டாடுவோம் என அன்புடன் கேட்டுக்கொள்கிறேன் என்றார்.

# “சிறந்த வழிகாட்டுதல்களாக உள்ளது”



இலட்சியப் போக்கில் வாழ்வைச் செம்மைப்படுத்திய இறைத்தூதர் இப்றாஹிமின் முன்மாதிரிகள், சகலருக்கும் சிறந்த வழிகாட்டுதல்களாக உள்ளதாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தனது புனித ஹஜ்ஜுப் பெருநாள் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

மேலும், ஐயாயிரம் வருடங்களுக்கு முன்னரே சிறந்த நாகரீகத்தைக் கட்டியெழுப்பும் இலட்சியத்தில் பயணித்தவர் இறைத்தூதர் இப்றாஹிம். அன்னாரின் முன்மாதிரிகள் உலகம் உள்ள வரைக்கும் சிறந்த வழிகாட்டுதல்களாக உள்ளன. மானிட நாகரிகத்துக்கான முகவாசல்களை தனது மகன்களூடாக ஆரம்பித்த இலட்சிய புருஷர் இறைத்தூதர் இப்றாஹிம். இஸ்ஹாக் (அலை) ஊடாக பலஸ்தீனத்திலும் இஸ்மாயில் (அலை) மூலமாக மக்காவிலும் சமூக நாகரீகத்துக்காக அவரிட்ட அடித்தளங்கள்தான், இஸ்லாம், கிறிஸ்தவம் மற்றும் யூதம் என உலகின் பெரும்பான்மை மதங்களைத் தோற்றுவித்துள்ளன.

இலட்சியத்தில் திடகாத்திரம், செயற்பாடுகளில் நம்பிக்கை வைத்துச் செயற்பட்டதால் இறைவன், இறைத்தூதர் இப்றாஹிமின் பயணங்கள், புலப்பெயர்வுகளில் வெற்றியைக் கொடுத்தான். நவீன உலகில் நாம் எதிர்கொள்ளும் சவால்களை வெற்றி கொள்வதற்கு இதே மாதிரியான திடகாத்திரம் மற்றும் நம்பிக்கைகள் அவசியம். சோதனைகள், இடர்கள் எல்லாம் தற்காலிகமானதே. இறைத்தூதர் இப்றாஹிமின் வழியில் செயற்பட்டால், இவற்றைத் தகர்த்தெறியும் தைரியம் எமக்குக் கிடைக்கும்.

ஹஜ் கிரியைகள் இன்னும் “குர்பான்” கடமைகளை நிறைவேற்றும்போது, சக சமூகங்களின் உணர்வுகளை கௌரவிக்கும் வகையில், முஸ்லிம்கள் நடந்துகொள்ள வேண்டும். இவ்வாறான புரிதல்கள்தான், சமூக மற்றும் சமயங்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்தும்.

ஒரே தந்தையின் வழித்தோன்றல்களில் வந்த வேதங்களான யூதர்களும் முஸ்லிம்களும் இன்று பலஸ்தீனத்தில் மோதிக்கொள்வது, மானிட நேயர்களை பெரும் கவலைக்குட்படுத்தியுள்ளது. இந்நிலைமை நீங்க நாம் அனைவரும் பிரார்த்திப்பது அவசியம். மாற்று மதங்களைப் புரிந்துகொள்ளும் மனோபக்குவமே உலகின் நிரந்தர அமைதிக்கு வழிகோலும்” என்று குறிப்பிட்டுள்ளார்.

## இந்திய மீனவர்களின்

# அத்துமீறல் அதிகரிப்பு

■ எஸ்.நிதர்ஷன்

எமது கடற்பரப்பிற்குள் இந்திய மீனவர்களின் அத்துமீறல்களை எந்த வகையிலும் அனுமதிக்க முடியாது. அவ்வாறு அத்துமீறல்கள் இப்ப நடக்காது என்று உறுதியாக சொல்ல முடியாது என்று ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகமும் கடற்றொழில் அமைச்சருமான கே.என்.டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவரது கட்சி அலுவலகத்தில் ஞாயிற்றுக்கிழமை (16) நடாத்திய ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போது இந்திய மீனவர் விவகாரம் தொடர்பிலான கேள்விக்குப் பதிலளிக்கும் போதே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். மேலும் தெரிவித்ததாவது,

இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறி எல்லை தாண்டி வந்து சட்டவிரோத தொழில்களில் ஈடுபடுவது எந்த வகையிலும் அனுமதிக்க முடியாது. அதனை ராஜதந்திர ரீதியாக மட்டுமன்றி, சட்டரீதியாகவும் எதிர்கொண்டு தடுக்க தயாராக இருக்கின்றோம். அதற்கான முனைப்புகளிலேயே தற்போதும் ஈடுபட்டு வருகிறோம்.



இந்தியாவினுடைய தடைக்காலம் முடிவடைந்திருக்கிறது. எனினும், தடுக்கின்ற நடவடிக்கைகள் எல்லாத்துக்கும் நாங்கள் தயாராக இருக்கின்றோம். இருந்தும் வந்தால் உரிய நடவடிக்கை எடுப்போம்.

எமது ஜனாதிபதி இந்தியா சென்றபோது மீனவர் விவகாரம் தொடர்பில் இந்தியப் பிரதமருடன் கதைத்து இருக்கிறார். அதேபோல வெளிவிவகார அமைச்சருடனும் பேசியிருக்கிறார். வடமாகாண மீனவர்களுடைய இந்தப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்பதில் நான் தெளிவாக இருக்கின்றேன். அரசியலுக்காக எதையும் பேசுவதில்லை. மக்கள் நலன் சார்ந்தே என்னுடைய செயற்பாடுகள் அமையும் என்றார்.

## வரவேற்பு கோபுர விவகாரம்

# புதனன்று ஆஜராக உத்தரவு





■ பாறுக் ஷிஹான்

சம்மாந்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வீரமுனை கிராம வீதி வரவேற்பு கோபுரம் அமைப்பதற்காக அடிக்கல் நாட்டும் நிகழ்வில் முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது.

இச்சம்பவம், சனிக்கிழமை(15) முற்பகல் இடம்பெற்றுள்ளதுடன், குறித்த பணியினை ஆரம்பித்து வைக்க அடிக்கல் நட வருகை தந்த இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திர காந்தனுக்கு நீதிமன்ற தடை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

குறித்த நீதிமன்ற உத்தரவினை சம்மாந்துறை பொலிஸார் சம்பவ இடத்திற்குச் சென்று வாசித்துக் காட்டியதுடன், அப்பகுதியில் இடம்பெறவிருந்த பதற்ற நிலைமையினை சீர் செய்தனர்.

மேலும், கடந்த வெள்ளிக்கிழமை(14) சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தில் வீரமுனை வரவேற்புக் கோபுரம் அமைப்பதற்கு எதிராக இரு நபர்களினால் முறைப்பாடு ஒன்று மேற்கொள்ளப்பட்டதற்கு அமைய இந்த நீதிமன்ற தடையுத்தரவு பெறப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

சம்மாந்துறை பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் நௌபர், மன்றுக்குச் சமர்ப்பித்த அறிக்கையின் பிரகாரம், சம்மாந்துறை பொலிஸ் பிரதேசத்திற்குட்பட்டதும் சம்மாந்துறை நீதவான் நீதிமன்ற நியாயாதிக்க எல்லைக்குள் உட்பட்ட சம்மாந்துறை ஆண்டியடி சந்தி எனும் இடத்தில் வீரமுனைக்கு செல்லும் வீதியில் வீரமுனை பிரதேச வாசிகளால் வரவேற்பு கோபுரம் ஒன்று அமைப்பதற்கு அடிக்கல் நாட்டு விழாவினை சனிக்கிழமை (15) நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அவ்வாறு நடத்தினால், தமிழ்- முஸ்லிம் மக்களுக்கிடையில் முறுகல் நிலையொன்று ஏற்படுவதற்குச் சாத்தியமுள்ளதாலும் பொதுமக்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் மற்றும் சமாதான குலைவு ஏற்படக்கூடிய சாத்தியமுள்ளதாலும் பொதுமக்களின் போக்குவரத்துக்குத் தடைகள் ஏற்படக்கூடிய சாத்தியமுள்ளதாலும் இந்த நிகழ்வை நடத்துவது உசிதமானது அல்ல என்பதனால் இந்த நிகழ்வினை நடத்தாமல் நிறுத்துமாறு கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் வீரமுனை கோவில் தலைவர் ராஜகோபால் கிராம உத்தியோகத்தர் பிரதீபன் உட்பட சிலருக்கு கோபுரம் அமைப்பதற்கு தடையுத்தரவு பிறப்பிக்குமாறு தாக்கல் செய்த மனுவுக்கு அமைவாக தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

அத்துடன், குறித்த இடத்திற்குக் கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் வருகை தந்திருந்தார் சம்மாந்துறை பொலிஸாரினால் நீதி மன்ற தடையுத்தரவு வாசிக்கப்பட்டது. இதன் போது இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் அமைதியாக அவ்விடத்தை விட்டுச் சென்றார். இதேவேளை, வீரமுனை பிரதேச மக்களினால் குறித்த நீதிமன்ற உத்தரவை மீறி கம்பி கூடுகள் நாட்டப்பட்டன.



இதனால் முஸ்லிம், தமிழ் இனத்தவர்களுக்கும் இடையில் கைகலப்பு ஏற்பட்டது பொலிஸார் நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து குறித்த இடத்திற்கு பொலிஸ் உயர் அதிகாரியின் வேண்டுகோளுக்கு இணங்க பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

சம்மாந்துறை பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் ஏ.சி.எம்.சகீல் பாராளுமன்ற உறுப்பினர் அதாவுல்லா அவர்களின் சம்மாந்துறைக்கான இணைப்புச் செயலாளர் ஆக்கிப் அன்சார் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் செயலாளர் பூ.பிரசாந்தன் சம்மாந்துறை நம்பிக்கையாளர் சபையினர் கோவில் நிர்வாகத்தினர் கிராம சேவை உத்தியோகத்தர் நீர்ப்பாசன திணைக்கள உத்தியோகத்தர் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

குறித்த விடயம் தொடர்பாக முறைப்பாடு செய்தவர்களும் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டவர்களும் 2024.06.19ஆம் திகதி காலை 9.00 மணிக்கு சம்மாந்துறை நீதவான் நீதிமன்றில் ஆஜராகுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டனர்.

குறித்த கோபுரம் அமைப்பது சம்பந்தமாக இதற்கு முன்னரும் முயற்சி செய்து அது தொடர்பில் பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டு சட்டப்படி அனுமதி பெறப்படாமல் அதற்கான தீர்வு இன்னும் கிடைக்காமல் உள்ள நிலையில் இச்சம்பவம் நடந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# அம்மன் சடங்கு...

சம்மாந்துறை கோரக்கர் அருள்மிகு ஸ்ரீ அகோர மாரியம்மன் ஆலய வருடாந்த தீமிதிப்பு சடங்கு பகல் இரவு பூஜைகளுடன் களைகட்டி வருகிறது. ஆலய பிரதம பூசகர் மு.ஜெகநாதன் தலைமையில் ஏராளமான பக்தர்கள் சகிதம் சடங்கு இடம் பெற்று வருவதைக் காணலாம்.

- வி.ரி.சகாதேவராஜா














# ஹட்டனில் ஆர்ப்பாட்டம்

■ செ.தி.பெருமாள்

தமக்கு அரசாங்க வேலைகளை வழங்குமாறு கோரி தோட்ட வேலையற்ற பட்டதாரிகளால் ஹட்டன் நகரில் கவனயீர்ப்பு பேரணியும் கவனயீர்ப்பு போராட்டமும் ஞாயிற்றுக்கிழமை (16) நடத்தப்பட்டது.

ஹட்டன் நகர மையத்திலிருந்து ஆரம்பமான இந்த ஆர்ப்பாட்ட பேரணி ஹட்டன்-மல்லியப்பு சந்தி வரை சென்று அங்கு ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

தற்போது தோட்ட பகுதியில் உள்ள அனைத்து அரச பாடசாலைகளில் கடுமையான ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதாகவும், அந்த ஆசிரியர் பற்றாக்குறையை நிரப்புவதற்கு வேலையற்ற நிலையில் இருக்கும் பட்டதாரிகளை ஆசிரியர் பதவிகள் வழங்க முடியும் எனவும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட மக்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும், பல்வேறு அரசுப் பணிகளுக்காகப் பட்டதாரிகளாக உள்ள தமக்கு அந்தப் பதவிகளை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என இந்தப் போராட்டக்காரர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.





# மகிழ்ச்சியாக இருங்கள் ஆனால் கவனமாக இருங்கள்

இயற்கையின் கோட்பாட்டின் படி, பிறக்கும் அனைத்து உயிரினங்களும் இறக்கின்றன. அழியாதவர்களாக ஆகாமல் நீண்ட ஆயுளை அடைவதற்காக நாம் செயல்பட வேண்டும். அவ்வாறு செய்ய, நீங்கள் முதலில் உங்களை நேசிக்க வேண்டும். அலட்சியம் அதன் விலகலின் ஓர் அம்சமாகும்.

வேலைகளில் இருப்பவர்கள் விடுமுறை நாட்களில், வெளியில் சென்று, நாட்களைக் கழிப்பதற்கே விரும்புவார்கள், வீடுகளில் இருந்து குடும்பத்துடன் வெளியேறுபவர்களில் பெரும்பாலானவர்கள் அலட்சியத்தை உயிரிழந்து விடுகின்றனர்.

நமது நாட்டை பொறுத்தவரையில் அண்மையாக காலங்களில் பெறுமதிமிக்க உயிர்கள், வீணாக மடிந்து விடுகின்றனர். குழந்தைகள், சிறார்கள், மாணவர்கள், இளைஞர்கள், வைத்தியர்கள், பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவானோர் என பலரும் அலட்சியத்தால் உயிரிழக்கின்றனர். வீதி விபத்துக்களால் இன்னும் பலர் அகால மரணமடைந்துவிடுகின்றனர்.

விபத்துக்கள் தொடர்பில் எவ்வளவுதான் அறிவுரை கூறினாலும், எதிர்காலத்தில் இதுபோன்ற விபத்துகள் நடக்காது என்று யாரும் உறுதியாக நம்ப முடியாது. நாளை இது போன்ற விபத்துகள் நடக்காது என்ற முடிவுக்கு வர முடியாது. மக்களின் ஒழுக்கமின்மையால் விபத்துகளைத் தவிர்க்க முடியாது.

எத்தனை செய்திகள் வந்தாலும் சிலர் அதை மட்டுப்படுத்துவதில்லை. எந்த விசாரணையும் இல்லாமல் ஏரி, ஓடை, ஆறு, கடலில் குதித்து பொழுதுபோக்கைத் தேடுபவர்களும் உண்டு. வேடிக்கை என்பது யாருக்கும் இன்றியமையாதது. அப்படியிருந்தும், வேடிக்கை என்று சொல்லப்பட்டவை பாதுகாக்கப்பட வேண்டும். இதற்கு ஒருவர் பின்பற்ற வேண்டிய அறிவுரை "மகிழ்ச்சியாக இருங்கள் ஆனால் கவனமாக இருங்கள்".

தண்ணீரின் ஆழம் யாருக்கும் தெரியாது என்பது பழமொழி. அழகிய கடற்கரை, அழகிய அருவி, அழகிய மலைத்தொடர், அழகிய ஏரி என உத்வேகத்தை அனுபவிக்கச் செல்பவர்கள் அனைவரும் நினைவில் கொள்ள வேண்டியது, ஒவ்வோர் இடத்திலும் ஒரு "மறைந்த கொலையாளி" உள்ளது.

நீர்வீழ்ச்சி அருகே செல்பி எடுக்கும்போது உயிரிழக்கின்றனர். சில ஓட்டுநர்கள் வாகனம் ஓட்டும்போது அலைபேசியில் பேசி மரணிக்கின்றனர். ரயில் தண்டவாளத்தில் அலைபேசியில் பேசிக் கொண்டு சென்றவர்கள் மரணிக்கின்றனர். இவை யாவும் ஒருமுறை நாம் கேள்விப்பட்ட துரதிர்ஷ்டவசமான சம்பவங்கள். இவற்றைக் கண்டு கற்காத சமூகத்தின் ஆபத்துகளைக் குறைப்பது கடினம்.

நாட்டிலேயே சிறந்த மனிதவளத்தை இழந்து வருகிறோம். குடிபோதை, சாரதியின் தூக்கம் மற்றும் வேண்டுமென்றே கவனக்குறைவாக வாகனம் ஓட்டுதல் ஆகியவையே இந்த விபத்துகளுக்குக் காரணம் என காவல்துறை அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இந்த விபத்துகளைக் குறைக்க, ஒழுக்கமான ஓட்டுநர்கள் உருவாக்கப்பட வேண்டும் மற்றும் போக்குவரத்து விதிகள் மற்றும் தொடர்புடைய அபராதங்கள் கடுமையாக இருக்க வேண்டும். நீரில் மூழ்குதல், மின்சாரம் தாக்குதல் மற்றும் மின்னல் ஆகியவற்றைத் தவிர்க்க, பொழுதுபோக்கைப் பற்றி நன்கு புரிந்துகொள்வது மற்றும் பாதுகாப்பு நடைமுறைகள் மற்றும் வழிமுறைகளைப் பின்பற்றுவது முக்கியம். முதல் மூன்றும் பாதுகாப்பு - இரண்டாவது வேடிக்கை, என்ற மனப்பான்மையுடன் செயல்பட்டால் விபத்துகளைக் குறைக்கலாம்.

## தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk



தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.


அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்

No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




# சம்பள அதிகரிப்பு கோரிக்கைகளுக்கு தீர்வென்ன?

**லக்ஸ்மன்**

பொருளாதார நெருக்கடி, விலைவாசி அதிகரிப்பு அதனால் ஏற்பட்ட வாழ்க்கைச் செலவு அதிகரிப்புப் பிரச்சினை காரணமாக சம்பள அதிகரிப்பு கோரிய போராட்டங்கள் இலங்கையில் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றன.

இதன் காரணமாக சம்பள அதிகரிப்புக் கோரும் போராட்டங்களும் வேலை நிறுத்தங்களும் மிகச் சாதாரணமாக மக்களால் கணக்கிலெடுக்கப்படாத விடயமாக மாறிவிட்டது என்பதே உண்மை. போராட்டம்தானே அது சரியாகிவிடும் என்கிற மனோநிலையே அது.

இதிலொன்றுதான், பல்கலைக்கழக போதனைசாரா ஊழியர்களின் பணிப் பகிஷ்கரிப்புப் போராட்டம். இவர்கள், மாதாந்த சம்பள மற்றும் கொடுப்பனவு அதிகரிப்பு கோரிக்கையை முன்வைத்து மே மாதம் 2ஆம் திகதி தொடக்கம் 47 நாட்களாக பணிபகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் வரை போராட்டம் தொடரும் என்ற நிலைப்பாடு தொடர்ந்து கொண்டிருக்கையில் தான் தம்முடைய நகர்வுகளை அரசாங்கம் எடுக்கவேண்டிய நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

இதனால், கல்வி பாதிக்கப்படுகின்ற இலங்கையின் 17 பல்கலைக்கழகங்கள், பல்கலைக்கழக வளாகங்கள், மற்றும் பல்கலைக்கழகங்களுடன் இணைந்த நிறுவனங்களின் மாணவர்களது வாழ்க்கைப் பிரச்சினையாகும். இதற்குள் அரசியல்வாதிகள், விரிவுரையாளர்கள், ஏன் போராட்டத்தினை நடத்துபவர்களின் குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளும் கல்வி கற்கின்றனர். போராட்டத்தினால், வீணடிக்கப்படுவது கல்வி நடவடிக்கை மாத்திரமல்ல, பரீட்சைகள், பரீட்சைப் பெறுபேறுகள், பட்டமளிப்புகள் என அனைத்தும் அடங்கும்.

கடந்த 8 வருடங்களாக அதிகரிக்கப்படாது தொடர்ச்சியாக அரசினால் இழுத்தடிப்புச் செய்யப்பட்டுவரும் சம்பள உயர்வு உடனடியாக வழங்கவேண்டும் என்பதுதான் பல்கலைக்கழக நிர்வாக உத்தியோகத்தர்கள், கல்வி சார் உதவி உத்தியோகத்தர்கள் மற்றும் கல்வி சார ஊழியர்களுடைய கோரிக்கையாக இருக்கிறது. அதாவது, 2015ஆம் ஆண்டு இறுதியில் 2016ஆம் ஆண்டிற்கான வரவு -செலவுத் திட்டத்தில் அரசாங்க அலுவலர்களுக்கு 10,000ரூபா கொடுப்பனவினை 5 கட்டங்களாக அடிப்படையில் உள்ளீர்ப்புச் செய்து வெளியிடப்பட்ட சுற்று நிருபத்தின் ஆரம்பத்திலேயே அரச பணியாளர்களின் அடிப்படைச் சம்பளமானது 2020இல் 107வீத அதிகரிப்பையும் பல்கலைக்கழக பணியாளர்களுக்கு 92வீத அதிகரிப்பையும் வெளிப்படுத்தியிருந்தது. இதனை 2016இன் ஆரம்பத்தில் வெளியிடப்பட்ட சுற்றறிக்கை தெளிவாகக் காட்டியிருந்தது. அதனை அக் காலத்திலிருந்தே சீர்செய்ய வேண்டுமென்று பலமுறை பல்கலைக்கழக ஊழியர்கள் கோரியிருந்த போதிலும் அதனை அரசாங்கம் சீர்செய்யவில்லை.

இருந்த போதிலும், அரச பணியாளர்களுக்கு சம்பள சீர்திருத்தங்கள் செய்ய வேண்டுமென்று தொடர்ந்து கோரியிருந்த போதிலும், 2019இன் ஆரம்பத்தில் அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் சம்பள முரண்பாட்டைச் சீர்செய்ய சம்பள நிர்ணய ஆணைக்குழு தோற்றுவிக்கப்பட்டது.

அதனடிப்படையில், சம்பளத்தை அதிகரிப்பதாகவும் தெரிவித்திருந்தார். இறுதியில் அவர்களுடைய ஆணைக்குழுவின் அறிக்கை வெளிவருவதற்கு முன்னதாகவே அரச பணியாளர்களுக்கு மாத்திரம் 2019 ஜூலை மாத சம்பளத்திற்கு மேலதிகமாக இடைக்காலக் கொடுப்பனவாக அதிகரிக்கப்பட்ட 2,500 ரூபா இன்று வரை வழங்கப்பட்டு வருகின்றது.

ஏற்கெனவே 2016இல் ஐந்து கட்டங்களாக அதிகரிக்கப்பட்ட சம்பள அதிகரிப்பில் அரச பணியாளர்களிற்கு 107 வீதமும் அரச பல்கலைக்கழக பணியாளர்களிற்கு 92 வீதம் வழங்கி 2020இன் ஜனவரியில் 15 வீதம் அடிப்படைச் சம்பள இழப்பு ஏற்படுத்தப்பட்டிருந்ததாகப் பல்கலைக்கழக ஊழியர்கள் தெரிவித்து வருகின்றனர்.

இந்த இடத்தில்தான், பல்கலைக்கழக கட்டமைப்பில் ஏற்படும் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்கும் பொறுப்பு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவையே சாரும் என்ற வகையில், இவ்விடயத்தில் தலையீடு செய்து ஊழியர்களின் கோரிக்கைளுக்கு செவி சாய்த்து பல்கலைக்கழக அனைத்து ஊழியர்களினதும் பொறுப்பு வாய்ந்த அதிகாரியாக ஆணைக்குழு தலைவர் செயற்பட வேண்டும் என்ற வேண்டுகோளையும் பல்கலைக்கழக ஊழியர்கள் முன்வைத்துள்ளனர்.

பணிபகிஷ்கரிப்பு காரணமாக ஏற்படும் பிரச்சினைகளைத் தவிர்க்கும் வகையில், உயர்கல்வி அமைச்சு விரைந்து நடவடிக்கை எடுக்காத நிலைமையே காணப்படுகிறது. கல்வி சாரா உத்தியோகத்தர்களின் பலம் குறித்து அவர்கள் நன்கு உணரும் வகையில், சில நடவடிக்கைகளை எடுக்கவேண்டிய நிலைக்கு நாங்கள் தள்ளப்பட்டுள்ளோம் என கடந்த வெள்ளிக்கிழமை பல்கலைக்கழகங்களின் முன்பாக நடத்திய போராட்டம் ஒன்றின் போது ஊழியர் சங்கத்தினரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதே நேரத்தில் பகிஷ்கரிப்பையும் பொருட்படுத்தாதது மனிதாபிமான அடிப்படையில் நாங்கள் வழங்கிவந்த சேவைகளையும் நிறுத்தி, அனைத்து அத்தியாவசிய சேவைகளையும் முடக்கி சிலருக்குப் பாடம் புகட்டவும் தயங்கமாட்டோம் என்றும் குறிப்பிட்டுள்ளனர். அதனை உறுதி செய்துமுள்ளனர். அத்துடன், நாளை 18ஆம் திகதி கொழும்பில் பாரிய எதிர்ப்பு நடவடிக்கையும், 19ஆம் திகதி முதல் அனைத்து பல்கலைக்கழகங்கள் முன்பாக சத்தியாகிரக நடவடிக்கையும் ஆரம்பிக்கப்படவிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

பல்கலைக்கழகங்கள் என்றாலே போராட்டங்களுக்குக் குறைவில்லாதது என்ற வரலாறுதான் ஆரம்பக் காலங்கள் முதலே இருந்து வருகிறது. மாணவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்துவது, ஊழியர்கள் போராட்டம் நடத்துவது என்றவாறு ஏதோ ஒருவகையில் பல்கலைக்கழகங்களின் கல்வி நடவடிக்கைகளில் குழப்பங்கள் ஏற்படுவது வழமை. அரசு ஊழியர்கள் என்பவர்கள் மக்கள் நலன் சார்ந்து செயற்படுபவர்கள் என்றுதான் பொருள். ஆனாலும், இந்த மக்கள் தங்களுடைய உரிமைகள் சார்ந்து போராட்டங்களை முன்னெடுப்பதனால், அது பல பிரச்சினைகளைத் தோற்றுவிக்கிறது.

தொழிற்சங்க நடவடிக்கை என்பது ஒரு கட்டுக்கடங்காத விடயமாக மாறி வருவதாகவே உணரமுடிகிறது. அனைத்து பல்கலைக்கழக தொழிற்சங்கங்களின் கூட்டுக்குழு ஆரம்பித்திருக்கின்றன தொழிற்சங்க நடவடிக்கை இவ்வாறான பிரதிபலிப்புகளை ஏற்படுத்தியிருக்கிறது என்பது வெளிப்படையாகத் தெரிகின்ற உண்மை.

பல்கலைக்கழக போதனை சாரா ஊழியர்களின் வேலைநிறுத்த முன்னெடுப்பு என்பது ஒரு வெறுமனே ஒரு சம்பள முரண்பாடு சார்ந்த பிரச்சினையாக மாத்திரம் பார்த்துவிட முடியாது. தொழிற்சங்க நடவடிக்கைக்குச் செல்லாமல் பேச்சுவார்த்தை ஊடாக குறித்த தொழில்சார் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ளப் பல்கலைக்கழக தொழிற் சங்கங்களின் கூட்டுக் குழு தொடர்ச்சியாக செயற்பட்டுள்ளபோதும் பொறுப்பு வாய்ந்த தரப்பினரின் கரிசனையின்மை இவ்வாறான நிலையை உருவாக்கியிருக்கிறது. பல்கலைக்கழக முறைமையினுள் கல்விசாரா ஊழியர்களுக்கு ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் தீர்த்து வைக்கப்படவேண்டியதே என்றாலும் எதிர்கால சமூகத்தைப் பாதிக்கின்ற ஒன்று என்ற வகையில் அனுசரித்துச் செல்லவேண்டியது கட்டாயமாகும்.


தற்போது நடைபெறுகின்ற போராட்டமே முதலாவது போராட்டம் என்ற வகையில் அனைத்து மக்களதும் பார்வை இருந்தாலும், 2016ஆம் ஆண்டு முதலில் தொடங்கி வைக்கப்பட்ட இந்த அனைத்து பல்கலைக்கழக ஊழியர்கள் சங்கங்களின் சம்மேளனத்தின் போராட்டத்தின் தொடர்ச்சியே இது.

2016ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் முன்னெடுக்கப்பட்ட போராட்டமானது 13 நாட்கள் தொடர்ந்தது. 2016 ஆம் ஆண்டு நடைபெற்றதுக்கு வழங்கப்பட்ட உறுதி மொழிகள் நிறைவேற்றப்படாத நிலையில், 2018 பெப்ரவரி மாதம் 28ஆம் திகதி முதல் 46 நாள் போராட்டமொன்றினை ஊழியர்கள் முன்னெடுத்திருந்தார்.

2019ஆம் ஆண்டு ஜூலை மாதம் 30ஆம் திகதி ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தத்தை; நடத்தியிருந்தனர். அதற்குச் செவிசாய்க்கப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தவறிவிட்டது. அடுத்து ஒகஸ்ட் மாதம் 28, 29ஆம் திகதிகளில் இரண்டு நாள் 48 மணி நேர வேலை நிறுத்தம் ஒன்று நடத்தப்பட்டது.

28ஆம் திகதி ஒவ்வொரு பல்கலைக்கழகங்களின் முன்னாலும், 28ஆம் திகதி அதனை அடுத்து 29ஆம் திகதி அனைத்து பல்கலைக்கழக தொழிற்சங்கங்களின் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் இலங்கையிலுள்ள அனைத்து பல்கலைக்கழகங்களும் தொழிற்சங்கங்களும், அனைத்து பல்கலைக்கழகங்களின் நிறைவேற்று உத்தியோகத்தர்களின் சங்கங்களும் கொழும்பிலுள்ள உயர் கல்வி அமைச்சு மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அலுவலகங்கள் முன் மிகப்பெரிய அளவிலான கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை மேற்கொண்டிருந்தனர். அதே போன்று 2023 மார்ச் மாதம் 9ஆம் திகதி ஒரு போராட்டமும், பின்னர் 15ஆம் திகதி அடையாள வேலை நிறுத்தமும் நடைபெற்றிருந்தது.

2016 முதல் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வரும் அனைத்து பல்கலைக்கழக ஊழியர்கள் போராட்டம் இவ்வருடத்திலேனும் நிறைவுக்கு வரவேண்டும் சம்பள விடயங்களுக்காகப் போராட்டம் நடத்துவது உண்மையில் கவலையானதுதான் என்பது மாணவர் சமூகத்தின் கருத்தாக இருந்தாலும், இமு;முறையேனும் தீர்வுடனோ ஒரு தீர்க்கமான பொருத்தப்பாட்டுடனோ முடிவுக்கு வரட்டும்.



## வாழ்வியல் தரிசனம்

மிகவும் சிக்கனமாகவும் புத்திசாலித்தனமாக வாழ்பவர்கள் எந்த நிலையிலும் அச்சப்படுவதேயில்லை.

எமது நாடு நெருக்கடியான காலத்தில் இருக்கும் போதும், சிக்கனமான வாழ்க்கை முறையினால் எந்தவித இடர்களையும் களைந்துவிடுகின்றனர்.

மிகவும் எளிய முறையில் சிறு தோட்டங்களை உருவாக்கிய படியே சுய தேவைகளைப் பெறுகின்றனர். கீரை வகைகள், முருங்கை இலை, முல்லை இலை, முட்டை, தூதுவளை, மொசுமொசுக்கை, முடக்கொத்தான் போன்றவற்றின் இலைகள் மிகச் சிறந்த யோய் எதிர்ப்புக்களை உருவாக்கும். மேலும் சுவையானதுமாகும்.

எமது முன்னோர் ஒருபோதும் பசும்பாலைக் காசு கொடுத்து வாங்குவதேயில்லை. பசுக்கள், எருதுகளை வளர்த்துவந்தோர்கள். கீரை வகைகள், காய்கறி வகைகளை சுய உழைப்பின் மூலம் உருவாக்குவதனால் பஞ்சம் என்ற பேச்சுக்கே இடமில்லை.

குடும்ப அங்கத்தினர் அனைவரும் ஒருங்கிணைந்து மேற்சொன்ன வழிமுறைகளை கையாண்டமையினால் உடல் வலிமை பெற்றனர். இந்த முனைமை ஒரு பொழுதுபோக்குவதுமாகும். நிலவளத்தை வீணடிக்கலாகாது.

- பருத்தியூர் பால.வயிரவநாதன்

## கடிதங்கள்

### உரிய அளவு நீர் வேண்டும்

போதிய நீரின்றி சேதமாகும் விவசாய நெற்கதிர்களைக் கண்டு கவலையடைந்துள்ள விவசாயிகள், உரிய அளவு நீரினை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு சம்மந்தப்பட்டவர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அக்கரைப்பற்று-நீத்தையாறு தென் மற்றும் நீத்தையாறு மேல் ஆகிய பகுதிகளில் சுமார் 1,000 ஏக்கர் வயல் நிலங்கள் போதிய நீரின்றி சேதமாகும் நிலை ஏற்படப்போவதாக அவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

நெற்செய்கையானது குடலைப் பருவத்தை அடைந்து நெற்கதிர் வெளிவரும் நிலையில், போதிய அளவு நீருன்றி நிலம் காய்ந்துள்ளதால் விளைச்சல் பாதிப்படையும் எனவும் விவசாயிகள் குறிப்பிட்டுள்ளனர்.

பன்னலகம மற்றும் அம்பலோயா குளங்களில் இருந்து நீரினை பாய்ச்சல் மூலமாக பெறும் பயிர் நிலங்களே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

- வி.சுகிர்தகுமார்



# ‘SLT-MOBITEL’ இடமிருந்து ‘Aviator Prime HD’ அறிமுகம்

‘SLT-MOBITEL’ இன் புதிய ‘Aviator Prime’ இனால், தடங்கல்களில்லாத களிப்பூட்டும் வீடியோ காட்சிகளை HD தரத்தில் எந்நேரத்திலும், எதற்காகவும் பார்வையிட்டு அனுபவிக்கும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

வாடிக்கையாளர்களின் அதிகரித்துச் செல்லும் தேவைகளை புரிந்து கொண்டும், தடங்கல்களில்லாத இணைப்புடன், anytime இணைய வசதியை வழங்கும் வகையிலும், SLT-MOBITEL இன் புதிய Aviator Prime HD பக்கேஜ்களினால் உயர் மொபைல் அனுபவம் வழங்கப்படுவதுடன், வாடிக்கையாளர்களுக்கு தமக்கு பிடித்த ஒன்லைன் செயற்பாடுகளை எந்தவித தடங்கல்களுமின்றி மேற்கொள்வதற்கு வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

புத்தாக்கமான பக்கேஜ்களினூடாக, அதிவேக இணைய இணைப்பு உறுதி செய்யப்படுவதுடன், வேகக் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுவதில்லை. எந்த வலையமைப்புக்கும் அன்லிமிடெட் அழைப்புகளுடன், SMS Bundleகளும் வழங்கப்படுகின்றன. அத்துடன், இணைய வேகங்கள் பற்றி கவலை கொள்ளாமல், Meta மற்றும் YouTube போன்ற சமூக ஊடக தளங்களில் high definition (HD) இல் வீடியோக்களை பார்வையிடும் வசதியும் வழங்கப்படுகின்றது. பாவனையாளர்களுக்கு தமக்கு பிடித்த ஒன்லைன் அம்சங்களை தடங்கல்களின்றி ஸ்ட்ரீம் செய்து, பிரவுஸ் செய்து ஈடுபாட்டை பேணக்கூடிய வகையில் பக்கேஜ்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

தடங்கல்களால் ஏற்படும் தாமதங்களிலிருந்து வாடிக்கையாளர்கள் விடுபட்டு,தடங்கல் இல்லாத களிப்பூட்டும் அம்சங்களை பார்வையிடும் சுதந்திரத்தை பெறுகின்றனர். புதிய திரைப்படங்கள், சின்னத்திரை நாடகத் தொடர்கள் அல்லது இசையை கேட்டு மகிழ்வது என சகலதையும் இந்த பக்கேஜ்கள் தடங்கல்களின்றி முன்னெடுக்க உதவுகின்றன.

அதிவேக இணைய இணைப்புகளை வழங்குவதற்கு மேலதிகமாக, Aviator Prime HD பக்கேஜ்களில் எந்த வலையமைப்புக்கும் அன்லிமிடெட் அழைப்புகள் மற்றும் SMS Bundleகள் வழங்கப்பட்டு, எப்போதும் ஒபற்ற தொடர்பாடல் உறுதி செய்யப்படுகின்றது.

வாடிக்கையாளர்களுக்கு தமது தேவைகளுக்கேற்ப தினசரி, மாதாந்த மற்றும் நீடித்த செல்லுபடியாகும் தெரிவுகளுடன் பொருத்தமான பக்கேஜ்களை தெரிவு செய்து கொள்ளலாம். தினசரி பக்கேஜ் முதல் மாதாந்த பக்கேஜ் வரை, SLT-MOBITEL இடமிருந்து தினசரி வாழ்க்கை முறை மற்றும் பணத்தொகைக்கு பொருத்தமான தெரிவை மேற்கொள்ளலாம்.




1 நாளுக்கான Aviator பக்கேஜுக்கு, பாவனையாளர்களுக்கு 1.5GB, Unlimited any net அழைப்புகள் மற்றும் 30 SMS கள் ரூ. 98 க்கு வழங்கப்படுகின்றன. Aviator Pro பக்கேஜ் என்பது 30 நாட்களுக்கு செல்லுபடியாகும் என்பதுடன், 45GB டேட்டாவை (நாளொன்றுக்கு 1.5GB), Unlimited any net அழைப்புகள் மற்றும் 1000 SMS ஆகியவற்றை ரூ.1555 வாடகையுடன் வழங்கும். Aviator Pro Max deal என்பது 90 நாட்களுக்கு வழங்கப்படுவதுடன், 90GB (நாளொன்றுக்கு 3GB), Unlimited any net calls மற்றும் 1000 SMS போன்றவற்றை ரூ.2999 க்கு வழங்கும். சகல பக்கேஜ்களுக்கும் இலவச WhatsApp, Google Mapsமற்றும்Wazeஆகியன வழங்கப்படும்.

சகல மொபைல் முற்கொடுப்பனவு வாடிக்கையாளர்களுக்கும் Aviator HD பக்கேஜ்களை பார்வையிட முடியும். Aviator Prime HD பக்கேஜை செயற்படுத்திக் கொள்வதற்கு, வாடிக்கையாளர்கள் தமது கணக்குக்கு Selfcare App இனூடாக அல்லது சௌகரியமான இதர முறைகளான விற்பனை நிலையங்கள், மொபைல் ஸே்ரார்கள் அல்லது வங்கிகளின்appகளினூடாக ரீலோட் செய்யலாம். செயற்படுத்தல் செயன்முறை ஒப்பற்றதாக அமைந்திருப்பதுடன், வாடிக்கையாளர்களுக்கு உடனுக்குடன் அனுகூலங்களைப் பெற்றுக் கொடுப்பதாகவும் உள்ளது.

SLT-MOBITEL இன் Aviator Prime HD பக்கேஜ்கள், பாவனையாளர்களின் வாழ்க்கை முறைக்கு ஒப்பற்ற வகையில் ஒன்றிணைந்து திகழும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன.

## யூனியன் வங்கி 24/7 ஸ்மார்ட்
# வங்கியியல் சேவைகள் விஸ்தரிப்பு

யூனியன் வங்கி 24/7 ஸ்மார்ட் வங்கியியல் சேவைகளை பெற்றுக் கொடுக்கும் வகையில் தனது டிஜிட்டல் வலயங்களை அண்மையில் தனது தலைமையகத்திலிருந்து ஆரம்பித்து, புறக்கோட்டை, ராஜகிரிய, கண்டி, கம்பஹா, நீர்கொழும்பு மற்றும் குருநாகல் ஆகிய பகுதிகளிலும் விஸ்தரித்துள்ளது. இவற்றினூடாக வாடிக்கையாளர்களுக்கு பண வைப்புகள், பண மீளப் பெறுகைகள், அட்டையில்லாத வைப்புகள், யூனியன் வங்கி கணக்குகளினுள் நிதிப் பரிமாற்றங்கள், யூனியன் வங்கி கிரெடிட் கார்ட் கொடுபனவுகள் மற்றும் கட்டணப்




பட்டியல் கொடுப்பனவுகள் போன்றவற்றை மேற்கொள்ள முடியும். புதிய டிஜிட்டல் வலயங்கள் இரத்மலானை, காலி மற்றும் அனுராதபுரம் ஆகிய நகரங்களிலும் விரைவில் திறந்து வைக்கப்படவுள்ளன.

வங்கியின் டிஜிட்டல் மாற்றச் செயற்பாட்டு மூலோபாயத்தில் முக்கிய படியாக இந்த டிஜிட்டல் வலயங்கள் அமைந்துள்ளதுடன், வாடிக்கையாளர்களின் சௌகரியத்தை மேம்படுத்தி மற்றும் டிஜிட்டல் பிரசன்னத்தை விரிவாக்கம் செய்வதாகவும் அமைந்துள்ளது. வாழ்க்கையை மாற்றியமைப்பதற்கான அர்ப்பணிப்பின் அங்கமாக, பிந்திய புத்தாக்கங்கள் மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றங்களை வாடிக்கையாளர்கள் மத்தியில் கொண்டுவருவதற்கான தொடர்ச்சியான முயற்சிகளை வங்கி மேற்கொண்ட வண்ணமுள்ளது.

# மும்மொழிகளிலும் செயற்படும் Q+ கொடுப்பனவு செயலி

லங்கா QR சான்றிதழ் அளிக்கப்பட்ட இலங்கையின் முதலாவது நடமாடும் கொடுப்பனவு செயலியான Q+ கொடுப்பனவு செயலி இப்போது மும்மொழிகளிலும் விரிவாக்கப்பட்டுள்ளது. தற்போது அதன் சிங்கள மற்றும் தமிழ் வடிவங்கள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. நிட்டம்புவயிலும் யாழ்ப்பாணத்திலும்; இடம்பெற்ற வெவ்வேறு நிகழ்வுகளில் இந்த புதிய அறிமுகங்கள் முன்னெடுக்கப்பட்டன.

கொமர்ஷல் வங்கியால் வலுவூட்டப்பட்ட இந்த Q+ கொடுப்பனவு செயலி தற்போது பாவனையாளர்களின் விருப்பு மொழியில் கிடைக்கின்றது. இந்த செயலியையும் அதன் கொடுப்பனவு தெரிவையும் பயன்படுத்துவது தற்போது நாடு முழுவதும் உள்ள விரிவான வாடிக்கையாளர் தளத்துக்கு விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

Q+ கொடுப்பனவு செயலியின் சிங்கள வடிவத்தை அறிமுகம் செய்யும் நிகழ்வு நிட்டம்புவையில் உள்ள நிஹால் பெஷன்ஸ் கடைத் தொகுதியில் இடம்பெற்றது. இந்த நிலையத்தில் இருந்து மேற்கொள்ளப்படும் பொருள் கொள்வனவுக்கான கொடுப்பனவை Q+ மூலம் மேற்கொள்ளும்பட்சத்தில் பணத்தை திருப்பிக் கொடுக்கும் ஊக்குவிப்பு திட்டத்தின் மூலம் இந்த அறிமுகம் இடம்பெற்றதாக வங்கி அறிவித்துள்ளது. கொமர்ஷல் வங்கி கார்ட் நிலைய தலைவர் நிஷான்த டி சில்வா, வங்கியின் கொழும்பு மெட்ரோ பிரிவு பிராந்திய முகாமையாளர் ஹேமந்த சூரியபண்டார, பிரதேசத்தை சேர்ந்த கிளை முகாமையாளர்கள் மற்றும் நிஹால்; குழுமத்தின் முகாமைத்துவம் மற்றும் ஊழியர்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.






Q+ கொடுப்பனவு செயலியின் தமிழ் வடிவத்தை அறிமுகம் செய்யும் நிகழ்வு யாழ்ப்பாணத்தில் உள்ள TCT மல்டி டிரேட் சென்டர் வளாகத்தில் இடம்பெற்றது. கொமர்ஷல் வங்கி கார்ட் நிலைய தலைவர் நிஷான்த டி சில்வா, வட பிராந்திய பிரதேச முகாமையாளர் ஏ. ஜெயபாலன், கிளைகள் பலவற்றின் முகாமையாளர்கள், வங்கியின் பிராந்திய ரீதியான சிரேஷ்ட அதிகாரிகள் TCT மல்டி டிரேட் சென்டர் ஊழியர்கள் ஆகியோர் இதில் கலந்து கொண்டனர்.



# கம்பன் விழா 2024 கோலாகலமாக ஆரம்பம்

அகில இலங்கை கம்பன் கழகம் நடத்தும் ‘கம்பன் விழா 2024’ கொழும்பு - இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் வெள்ளிக்கிழமை (14) மாலை 5 மணிக்கு கோலாகலமாக ஆரம்பமானது.

இவ்விழா, தொடர்ச்சியாக 15, 16 திகதிகளில் காலை 9.30 மணி முதல் மாலை 5.30 மணிக்கு இரு வேளை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இறுதி நாள் நிகழ்வு திங்கட்கிழமை (17) நடைபெறும்.


கம்பன் விழா முதல் நாள் நிகழ்வின் ஆரம்பக் கட்டமாகக் கம்பனின் திருவுருவப்படம் ஸ்ரீ ஐஸ்வர்ய லக்ஷ்மி திருக்கோவிலில் இருந்து இராமகிருஷ்ண மண்டபம் வரை ஊர்வலமாகக் கொண்டு செல்லப்பட்டு, விழா மேடையில் நிறுத்தப்பட்டு, பூஜை நடைபெற்றது.














# யானை – மனிதனுக்கு இடையிலான மோதல்களும் தீர்வுகளும்





ஜெய காந்தன் கனிஷ்ரா,
ஊடகத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

**உலகில் யானை – மனித மோதலில் முதலிடத்தில் வகிக்கும் நாடாக இலங்கை காணப்படுகின்றது. இதன் காரணமாக வருடம் ஒன்றுக்கு கிட்டத்தட்ட 100 பொதுமக்களும் 400 யானைகளும் உயிரிழக்கின்றன. கடந்த காலங்களுடன் ஒப்பிடும் போது, நடப்பு ஆண்டில் இந்த எண்ணிக்கை அதிகரிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.**

தற்போது யானை மனித மோதல் நிலைமைகள் மிக மோசமான நிலைமையை நோக்கிப் பயணித்துக்கொண்டிருப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

இப்பிரச்சினையினால் மக்களின் இயல்பு வாழ்வும் பொருளாதாரமும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக அநுராதபுரம், பொலன்னறுவை புத்தளம, குருநாகல், மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை, வவுனியா உள்ளிட்ட மாவட்டங்கள் இப்பிரச்சினையைப் பெரிதும் எதிர்கொண்டுள்ளன. தற்போது புதிதாக யானை அச்சுறுத்தலினை எதிர்நோக்கும் இடமாக மன்னார் மாவட்டமும் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது.

கடந்த இரண்டு மூன்று மாதகாலங்களாக மன்னார் மாவட்டத்தின் நானாட்டான் பிரதேசசபை பிரிவிற்குட்பட்ட பல கிராமங்களின் காட்டு யானைகளின் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. காட்டு யானைகள் இரவு வேளைகளில் மக்களின் குடியிருப்பு பகுதிகளுக்குள் நுழைந்து மக்கள் வாழ்வாதாரத்தினை சேதப்படுத்திய பல சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

## இலங்கையில் எத்தனை யானைகள் உள்ளன?

இலங்கையில் 2011இல் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்புகளின் பிரகாரம் 5,800 யானைகள் காணப்படுகின்றன. ஆனால், அந்த கணக்கெடுப்பில் வடக்கு, கிழக்கு உட்படுத்தப்படவில்லை. வருடம் ஒன்றுக்கு 400 யானைகள் உயிரிழந்து கொண்டிருக்கின்றன. எனினும், வடக்கு கிழக்கிலும் இருக்கின்ற யானைகளின் எண்ணிக்கையையும் கணக்கெடுத்துதான் இலங்கையில் இருக்கின்ற யானைகளின் எண்ணிக்கையைச் சரியாகக் குறிப்பிட முடியும். யானைகளின் முக்கியத்துவம்யானைகளுக்கும் இந்த நாட்டில் வாழ்வதற்கான உரிமை இருக்கின்றது என்பதனை யாரும் மறுக்க முடியாது. அதேநேரம், மக்களும் யானைகளிடமிருந்து பாதுகாப்பாக இருக்க வேண்டும். எனவே யானைகளுக்கும் மக்களுக்கும் இடையில் சகவாழ்வை நோக்கிய ஒரு செயற்பாட்டையே மேற்கொள்ள வேண்டும் என்பது ஆய்வாளர்கள் மற்றும் யானை ஆய்வுகள் தொடர்பான நிபுணர்களின் கருத்தாக அமைந்திருக்கிறது.

யானை மனித மோதலை தடுப்பதற்காக அரசாங்கம் மற்றும் சம்பந்தப்பட்ட நிறுவனங்களினால் எடுக்கப்படுகின்ற சகல தடுப்பு நடவடிக்கைகளும் யானைகளுக்கு மிகப் பாதகமாகவே அமைந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்த தடுப்பு நடவடிக்கைகள் இலங்கையில் யானையின் இருப்பையே கேள்வி குறியாக்கிவிடும் வகையில் உள்ளதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

யானைகளுக்கும் இந்த பூமியில் வாழ்வதற்கான உரிமை இருக்கின்றது. வனங்களில் யானைகள் இருக்கின்றமைமையை இலங்கை ஒரு சுற்றுலா தளமாகப் பயன்படுத்துகின்றது.

மிக அதிகளவான வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் இந்த யானைகள் கூட்டமாக இருப்பதைப் பார்க்க விரும்புகின்றனர். எனவே இந்த பகுதிகளில் இருக்கின்ற மக்களுக்கு இது ஒரு மிக முக்கியமான வாழ்வாதார மூலமாகக் காணப்படுகிறது.

யானைகள் மக்களின் வாழ்விடங்களை நோக்கிவருவதற்கான காரணங்கள் வறட்சி காலங்களில் காடுகளிலுள்ள நீர்த்தடாகங்கள் வற்றிப் போவதாலும், யானைகள் உணவாகக் கொள்ளக்கூடிய பயிர்கள் அழிவடைவதாலும்இ அவை விரும்பி உணவாகக் கொள்ளக்கூடிய பயிர்கள் காடுகளுக்கு அருகில் செய்கை பண்ணப்படுவதாலும்தான் உணவு மற்றும் தண்ணீரைத் தேடி மக்கள் வாழும் பிரதேசங்களுக்கு வருகின்றன. குறிப்பாக யானைகள் காணப்படும் காடுகளுக்கு அருகிலுள்ள பிரதேசங்களில் நெற்செய்கை உள்ளிட்ட பயிர்ச் செய்கைகளும் யானைகள் விரும்பி உணவாகக் கொள்ளக்கூடிய நெல்,

வாழை மற்றும் தென்னை போன்ற பயிர்களும் யானைகள் காணப்படும் காடுகளுக்கு அண்மித்த பிரதேசங்களில் பயிரிடப்படுவதால் அப்பயிர்களின் வாசனையை அறிந்து அவை அவற்றை நாடி வந்து உணவாகக் கொள்ளவும் செய்கின்றன.

மற்றும் மிருகக்காட்சி சாலைகளில் வளர்க்கப்படும் யானைகள் வயதான பின்பு காட்டுப் பகுதிகளுக்குக் கொண்டு சென்று விடப்படுகின்றன அவை தமக்கான உணவினை பெற்றுக்கொள்ளும் முகமாக மக்களின் குடியிருப்பு பகுதிகளில் நுழைந்து மக்களின் உடைமைகளைச் சேதப்படுத்துகின்றன.

யானைகளின் வாழிடங்கள் சுருங்கி வருவதோடு, அவை காணப்படும் காடுகளிலுள்ள குளங்களும், நீர்த் தடாகங்களும் நீண்ட காலமாகப் பராமரிக்கப்படாது அவை தூர்ந்து போயுள்ளன. அத்துடன், யானைகள் விரும்பி உண்ணக்கூடிய உணவுத் தாவரங்களும் காடுகளில் குறைவடைந்து வருகின்றன. இவ்வாறான காரணங்களினால் பெரும்பாலான யானைகள் தமக்குத் தேவையான நீரையும் உணவையும் பெற்றுக்கொள்வதில் பெரும் நெருக்கடிகளை எதிர்கொள்கின்றன. அதனால் காடுகளை விட்டு யானைகள் வெளியே வருகின்றன.

யானைகளின் மனித மோதல்களால் ஏற்படும் பாதிப்புக்கள் யானைகளின் மனித மோதல்கள் காரணமாக மக்களின் வாழ்வாதார நடவடிக்கைகள் பாதிக்கப்படுதல் அல்லது முற்றாக அழிக்கப்படுதல். மக்களின் வாழ்விடங்களுக்கு வருகின்ற யானைகள் மக்களின் பயிர்கள், விளைநிலங்கள், வயல் வெளிகளை நாசமாக்குவதுடன் வீடுகள், சொத்துக்களையும் அழிக்கின்றன. முக்கியமாகப் பெறுமதியான மனித உயிர்களுக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தப்படுதல்.

கடந்த 2021இல் 130 பேர் மரணமானர். அத்துடன், மக்களின் பெறுமதியான உடமைகள் அழிக்கப்படுதல், யானை தாக்கி மக்கள் உயிரிழத்தல், குறிப்பாக இரவு நேரங்களில் வெளியே செல்ல முடியாத நிலை பல இன்னல்களைப் பல கிராமங்களில் மக்கள் எதிர்கொண்டு வருகின்றனர்.

## யானைகளை ஊடுருவலை தவிர்ப்பதற்கான பரிந்துரைகள்

யானைகளை பொறுத்தவரையில் தினம் ஒரு யானை சராசரியாக எங்காவது ஒரு இடத்தில் மனித எதிர்ப்பு நடவடிக்கைகளினால் உயிரிழக்கின்றன. தினந்தோறும் ஊடகங்களில் யானை மனித மோதலில் யானை மற்றும் பொது மக்கள் உயிரிழக்கும் சம்பவங்களைப் பார்க்கின்றோம். கடந்த பல நூறு வருடங்களாகவே இந்த நிலைமை இலங்கையில் நீடிக்கின்றது. இவ்வாறான பிரச்சினைகளுக்குத் தீர்வுகளாகப் பின்வரும் திட்டங்களை முன்வைக்க முடியும்.

கிராமங்கள் மற்றும் விளைநிலங்களைப் பாதுகாக்கவென தற்காலிக விவசாய மின்வேலி மற்றும் கிராம மின்வேலி என்ற இரண்டு முன்னோடித் திட்டங்களைத் திட்டமிட்டு நடைமுறைப்படுத்தலாம். விவசாய விளைநிலங்களைப் பாதுகாக்கவென அமைக்கப்படும் மின்வேலிகளை அறுவடைக்குப் பின்னர் அகற்ற வேண்டும்.

அந்த மின்வேலியின் பராமரிப்பு மற்றும் பொறுப்பை கமநல அபிவிருத்தி திணைக்களத்திடம் வழங்கப்பட வேண்டும். அதேநேரம் யானை - மனித மோதல்கள் அதிகம் உள்ள கிராமங்களைப் பாதுகாக்கும் வகையில், கிராமத்தைச் சுற்றி அமைக்கப்படவுள்ள மின்வேலிக்கான பொறுப்பு மற்றும் பராமரிப்பு பணிகளை அந்தந்தப் பிரதேச செயலகங்களுக்கு வழங்கவும் நடைமுறைகளைச் செயற்படுத்தலாம். இத்திட்டத்தின் ஊடாக யானை - மனிதன் மோதல் குறைவடையவும் பாதிப்புக்களைத் தவிர்த்துக் கொள்ளவும் முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

வடமத்திய மாகாணத்தில் ஹபரண பகுதியில் பெந்திவெவ என்ற பிரதேசத்தில் ஒரு முன்மாதிரி யானை - மனித மோதலை தடுப்பதற்கான செயல்திட்டம் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது. அது வெற்றியளித்த திட்டமாகக் கருதப்படுகிறது.

அதாவது இந்த கிராமத்தில் யானை -மனித மோதலை தடுப்பதற்காக சமூக மட்டத்திலான மின்சார வேலி அமைக்கும் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. யானைகள் ஆய்வு தொடர்பான விஞ்ஞானி மற்றும் யானைகள் பாதுகாப்பு மற்றும் ஆய்வுக்கான நிலையத்தின் தலைவர் கலாநிதி பிரித்திவிராஜ் பெர்னாண்டோ கடந்த 30 வருடங்களாக மேற்கொண்ட ஆய்வின் விளைவாக இந்த புதிய திட்டம் உருவாக்கப்பட்டிருக்கின்றது.

யானைகள் மக்கள் வாழும் பிரதேசங்களுக்கு வருவதைத் தடுக்கும் நோக்கில் மின்சார வேலிகளை அமைப்பது தொடர்பாகவும் யானைகளைப் பாதுகாக்கப்பட்ட வனப்பகுதிகளுக்குள்ளேயே முடக்கும் விதமாகவும் திட்டங்கள் முன்வைக்கப்பட்டன. அந்தத் பரிந்துரைகளே இன்றுவரை இலங்கையில் முன்னெடுக்கப்படுகின்றன.

ஒரு கிராமத்தை எடுத்துக் கொண்டால் அங்கு அந்த கிராமத்தைச் சுற்றி ஒரு யானைகள் வராத முறையில் மின்சார வேலியை அமைக்காமல் அதற்கு மாறாக வீடுகளைச் சுற்றி மின்சார வேலி அமைத்தல், மக்களின் பயிர் செய்கைகள் இருக்கின்ற இடங்களைச் சுற்றி மின்சார வேலிகளை அமைத்தல், மக்கள் அடிக்கடி நடமாடுகின்ற இடங்களைச் சுற்றி மின்சார வேலிகளை அமைத்தல் என்ற அடிப்படையில் சமூக மட்ட மின்சார வேலி அமைக்கும் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

## விஞ்ஞானியின் பரிந்துரை

இந்த யானை மனித மோதல் மற்றும் அதற்கான தீர்வுகள் தொடர்பாக பிரித்திவிராஜ் கருத்து பகிர்கையில் “ யானை-மனித மோதல் இலங்கையில் மிகப்பெரிய நெருக்கடியாகக் காணப்படுகிறது. இதனைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் யானைகளுக்குப் பாதிப்பைக் கொடுக்கின்றன. யானை மனிதன் வாழும் பிரதேசங்களுக்குள் வருவதாக நாங்கள் கூறுகின்றோம். ஆனால், அது உண்மை அல்ல. மாறாக மனிதர்களே யானைகள் வாழுகின்ற பிரதேசத்தில் சென்று குடியிருப்புகளை அமைத்துக்கொண்டிருக்கின்றனர். எனவேதான், யானைகளுக்குச் செல்வதற்கு இடமில்லாததால் இவ்வாறு மக்கள் வாழ்கின்ற இந்த பிரதேசங்களுக்குள் வருகின்றன. குறிப்பாக யானை மனித மோதலை தடுக்கும் விதமாக முன்னெடுக்கப்படுகின்ற வெடிபொருட்களை வைத்தல்.

மின்சார வேலி அமைத்தல் உள்ளிட்ட பல நடவடிக்கைகளால் யானைகளுக்கு பாரிய சேதங்கள் ஏற்படுகின்றன. அதேபோன்று ரயில் மோதுவது, துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் போன்றவற்றினால் யானைகள் கொல்லப்படுகின்றன. எமது நாட்டுக்கு இருக்கின்ற இந்த மிகப்பெரிய சொத்தான யானைகள் இவ்வாறு உயிரிழப்பது வேதனையான விடயமாகும். எனவே அதனை தடுத்து நிறுத்த வேண்டும்.

அதேபோன்று, வருடம் ஒன்றுக்கு 100 பொது மக்கள் உயிரிழக்கின்றனர். மக்களின் சொத்துக்கள், வீடுகள், பயிர் நிலங்கள் போன்றவற்றை யானைகள் ஒரே இரவில் அழித்துவிட்டு செல்கின்றன.

எனவே, யானைகளுக்கு மக்களுக்கும் இடையில் ஒரு சகவாழ்வை கொண்டுவருவதே இங்கு மிக முக்கியமானதாக இருக்கின்றது. யானைகளுக்குப் பாதிப்பு இல்லாமல் மக்களுக்கும் பாதிப்பில்லாமல் யானைகளும் மக்களும் நடமாடும் வகையில் சூழல் உருவாக்கப்பட வேண்டும்.

அந்த அடிப்படையிலேயே நாம் எமது இந்த சமூக மட்ட வேலி அமைக்கும் திட்டத்தை முன்னெடுத்திருக்கின்றோம். அதுதற்போது வெற்றியடைந்திருக்கின்றது.

இதனை நாடு முழுக்க இருக்கின்ற இடங்களில் உருவாக்கலாம். வடக்கு கிழக்கு நிலைமையையும் பார்க்கவேண்டும். அங்கு இருக்கின்ற விஞ்ஞானிகள் இது தொடர்பாக உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். யானைகளுக்கு என்று பாதுகாப்பான வனங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் அவற்றில் 82 வீதமான பகுதிகளில் மக்கள் தற்போது குடியிருப்புகளை அமைத்திருக்கின்றனர்.

# தியாகத்தை போற்றும் பெருநாள்



அகமட்

உலகெங்கும் இருந்து சுமார் இருபது இலட்சம் ஹஜ்ஜாஜிகள் சவூதியில் உள்ள இஸ்லாத்தின் புனிதத் தலங்களில் ஹஜ் கடமைக்காக குழுமிருக்கின்ற நிலையில், உலக நாடுகள் எங்கும் வாழ்கின்ற 1.9 பில்லியன் முஸ்லிம்களில் ஒரு பகுதியினர் நேற்றும், இன்னும் ஒரு பகுதியினர் இன்றும் (பிறைக் கணக்கின்படி) ‘ஈதுல் அல்ஹா’ (தியாகத் திருநாள்) எனும் ஹஜ்ஜூப் பெருநாளைக் கொண்டாடுகின்றனர்.

இந்தத் தியாகத் திருநாள் இஸ்லாமிய வரலாற்றில் மிக முக்கியமான ஒரு தியாகத்தை நினைவுகூரும் வகையில் கொண்டாடப்படுகின்றது.

இறைத் தூதர்களுள் ஒருவரான இப்ராஹிம் நபி அவர்களினதும் அவரது மனைவி ஹாஜரா (அலை) மற்றும் மகன் இஸ்லாமில் (அலை) ஆகியோரின் தியாகத்தை, அதன் பின்னர் வந்த முஸ்லிம் மக்கள் அனைவரும் நினைவு கூர வேண்டும், போற்ற வேண்டும் என்ற அடிப்படையிலேயே ஹஜ் கடமையும், பெருநாளும் அதனையொட்டிய சமய நிகழ்வுகளையும் இறைவன் கடமையாக்கியிருக்கின்றான்.

இப்ராஹிம் நபியின் தியாகம் என்பது, இறை நம்பிக்கையாளர்களுக்கு மிகப் பெரும் உதாரணமாக அமைகின்ற ஒரு முக்கியமான வரலாற்றுச் சம்பவமாகும். அதுமட்டுமன்றி, இறைவனுக்காக மனிதன் செய்த உன்னதமான தியாகத்தை உலக மக்களுக்கு எடுத்துக் காட்டுவதாகும்.

இப்ராஹிம் (அலை) அவர்களுக்கும் அவரது துணைவியாரான ஹாஜரா (அலை) அவர்களுக்கும் நீண்ட நாட்களாகப் பிள்ளைப் பாக்கியம் இருக்கவில்லை. மிகவும் வயது முதிர்ந்த பருவத்தில் அல்லாஹ் அவர்களுக்குப் பிள்ளையொன்றைக் கொடுத்தான். அவர்தான் பிற்காலத்தில் இறைத் தூதரான இஸ்மாயில் (அலை) ஆவார்கள்.

இப்ராஹிம் நபிக்கு இறைவன் தொடர்ச்சியாகப் பல கஷ்டங்களைக் கொடுத்து அவரைச் சோதித்துக் கொண்டே இருந்தான்.

அந்த வகையில், குழந்தை இஸ்மாயில் (அலை) பிறந்து சிறிது காலத்தின் பின்னர் அல்லாஹ்வின் உத்தரவின் பேரில் தம் மனைவி ஹாஜிரா அம்மையாரையும், மகன் இஸ்மாயீல் (அலை) அவர்களையும் பாலைவனத்தில் தகிக்கும் சுடு மணலில் தன்னந்தனியாக விட்டுப் பிரிந்து செல்கின்றார்கள்.

அந்தப் பாலைவனத்தில் தண்ணீர் கேட்டழுத குழந்தைக்காக நீர் தேடி ஹாஜரா (அலை) அவர்கள் ஓடியதை நினைவுகூரும் முகமாகவே இன்றும் ஹஜ்ஜூக்கு செல்கின்ற பயணிகள் சபா - மர்வா மலைகளுக்கு இடையில் தொங்கோட்டம் ஓடுவதை வழக்கமாகக் கொண்டிருக்கின்றனர்.

அதுமட்டுமன்றி, அன்று தண்ணீர் கேட்டு அழுத குழந்தை இஸ்லாமாயில் அலைஹிவஸல்லம் அவர்களுக்காக அல்லாஹ்வின் அருளால் மலைகள் நிறைந்த அந்தப் பாலைவனத்திலிருந்து ஊற்றெடுத்த நீர்தான் இன்று வரை ‘ஸம் ஸம்’ என்ற வற்றாத ஊற்றாகக் காணப்படுகின்றது.

இவ்வாறிருக்கும் போது, இப்ராகிம் (அலை) அவர்கள், தனது மகன் இஸ்மாயீல் (அலை) அவர்களை அறுத்துப் பலியிடக் கனவொன்று கண்டார்கள். இது இறைவனின் கட்டளை ஆகும்.

ஆகவே, அதற்கு கீழ்படியும் வகையில் தனது அன்பு மகனைப் பலியிட இப்ராஹிம் (அலை) அவர்கள் துணிந்தார்கள். ‘இது இறைவனின் கட்டளை என்றால் அதனை நிறைவேற்றுங்கள்’ என்று தாயார் ஹாஜராவும் சொன்னார்கள். இது அவர்களது இறை நம்பிக்கையையும் தியாகத்தையும் எடுத்துக் காட்டுகின்றது.

“என் அருமை மகனே! நான் உன்னை அறுப்பது போல் கனவில் கண்டேன்.

நீ என்ன கருதுகிறாய் என்பதைச் சிந்தித்துக் கூறு’ என்று இப்ராஹிம் நபி தன் மகனிடம் கேட்டார்.

“என் தந்தையே! உங்களுக்குக் கட்டளையிடப்பட்டதைச் செய்யுங்கள்! அல்லாஹ் நாடினால் என்னைப் பொறுமையாளனாகக் காண்பீர்கள்” என்று மகன் இஸ்மாயில் பதிலளித்தார்.

அதுமட்டுமன்றி, தனது தந்தை இறை கட்டளைப்படி தன்னை அறுப்பதற்கு ஏதுவாக மகன் இஸ்மாயில் இடமளித்தார்கள்.

சிறுபிள்ளையாக இருந்தபோதும், அவர் கொண்டிருந்த மிகப் பெரிய இறை நம்பிக்கையினதும் பொறுமையினதும் வெளிப்பாடாக இது அமைகின்றது.

இப்ராஹிம் (அலை) அவர்கள் தனது அருமை மகனை அறுத்துப் பலியிடத் தயாரானார்கள். கழுத்தில் கத்தியை வைத்தார்கள். ஆனால், இறைவன் அந்தக் கத்திக்கு அறுக்கும் சக்தியை இல்லாமலாக்கியிருந்தான். அந்த நேரத்தில் இன்னுமொரு இறை கட்டளை வானத்திலிருந்து வந்தது.

“குழந்தைக்குப் பதிலாக ஒரு ஆட்டை அறுத்துப் பலியிடுமாறு” அல்லாஹ் அவர்களுக்குக் கட்டளையிட்டான்.

பல்லாயிரம் வருடங்களுக்கு முன்னர் இப்ராஹிம் நபியும் அவரது மனைவி ஹாஜரா (அலை) அவர்களும் இஸ்லாமில் (அலை) அவர்களும் செய்த இந்த தியாகத்தை நினைவு கூருமாறு அல்லாஹ் கட்டளையிட்டுள்ளான்.

ஹஜ் பயணமும், தியாகத் திருநாள் எனப்படும் ஹஜ்ஜூப் பெருநாளும், இந்த நாட்களில் இடம்பெறுகின்ற உழ்ஹிய்யா உள்ளிட்ட வேறு பல சமய நடைமுறைகளும் இப்ராஹிம் நபியின் குடும்பம் செய்த தியாகத்தை மையமாகக் கொண்டே இடம்பெறுகின்றன.

இறை நம்பிக்கையும் மனிதனின் தியாகமும் இறைவனிடத்தில் எந்தளவுக்கு உயர்ந்தது என்பதையும், அதனை அல்லாஹ் எந்தளவுக்கு நேசிக்கின்றான் என்பதற்கும் இந்த தியாகத் திருநாளும் ஹஜ் கடமையும், பல நூற்றாண்டுகள் கடந்தும் உலகுக்கு எடுத்தியம்பிக் கொண்டே இருக்கின்றது.

சவூதி

## மக்காவில் கடும் வெப்பம்:
# ஹஜ் யாத்ரீகர்கள் 6 பேர் மரணம்

மக்காவில் ஏற்பட்டுள்ள கடும் வெப்பம் காரணமாக, ஹஜ் யாத்திரைக்குச் சென்ற ஆறு பேர் உயிரிழந்துள்ளனர்.

இறந்தவர்கள் ஆறு பேரும் ஜோர்டானிய குடிமக்கள் என, ஜோர்டானிய வெளியுறவு அமைச்சகம் சனிக்கிழமை(15) கூறியுள்ளது, ஜனாஸாக்களை புதைக்கும் நடைமுறைகள், அவர்களின் சடலங்களை ஜோர்டானுக்கு மாற்றுவது குறித்து ஜெட்டாவில் உள்ள சவுதி அதிகாரிகளுடன் இணைந்து நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வெளிநாட்டு செய்திகள் தெரிவிக்கின்றன.



இந்த ஆண்டு வருடாந்திர கூட்டத்தின் போது வெப்பநிலை 48 டிகிரி செல்சியஸை (118 டிகிரி பாரன்ஹீட்) எட்டக்கூடும் என்று சவூதி அதிகாரிகளின் எச்சரிக்கை விடுத்திருந்தனர்.

அதன்படி அங்கு கடும் வெப்பம் நிலவி வருகின்றது.

சுமார் 1.8 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் இந்த ஆண்டு ஹஜ்ஜில் பங்கேற்கின்றனர் என்று சவூதி பொது ஆணையம் தெரிவித்துள்ளது.

ஹஜ் என்பது உலகின் மிகப்பெரிய மதக் கூட்டங்களில் ஒன்றாகும் மற்றும் சவூதி அரேபியாவின் மிகப்பெரிய வருடாந்திர நிகழ்வு என்பது குறிப்பிடத்தக்கது.

தெலுங்கானா

# மாடுகளால் 144 தடை உத்தரவு

இஸ்லாமியர்கள் சார்பில் திங்கட்கிழமை (17) ஹஜ் பெருநாள் கொண்டாடப்படுகிறது. இதையடுத்து, தெலுங்கானா மாநிலத்தின் மெடாக் மாவட்டத்தில் சட்டவிரோதமாக மாடுகள் கொண்டு செல்லப்படுவதாக இரு சமூகத்தினர் இடையே வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது.

இந்த வாக்குவாதம் முற்றியதில் இரு பிரிவினர்களும் கடுமையாக மோதிக் கொண்டுள்ளனர். இதைத் தொடர்ந்து, அந்த பகுதியில் நிலைமையை கட்டுக்குள் கொண்டுவர 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.




144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட பகுதிகளில் ஒரே இடத்தில் நான்கிற்கும் அதிகமானோர் ஒன்று கூட அனுமதி இல்லை. இதன் மூலம் பிரச்சினை உள்ள பகுதிகளில் வன்முறை தலைதூக்குவதை தவிர்க்க முடியும்.

மோதல் தொடர்பாக ஏற்கெனவே ஐந்து பேரை கைது செய்த பொலிஸார், அவர்களிடம் தீவிர விசாரணை மேற்கொண்டு வருவதுடன், இது தொடர்பாக இரு பிரிவினரை சேர்ந்தவர்கள் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

144 தடை உத்தரவு அமுலில் இருப்பதை அடுத்து, அந்த பகுதியில் நிலைமை கட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளதாக பொலிஸ் துறை கண்காணிப்பாளர் பி பால சுவாமி தெரிவித்துள்ளார்.

# “86% பணியாளர்கள் வேலையில் போராடுகின்றனர்”

இந்தியாவில் வேலைக்கு செல்பவர்களில் 86% பேர் தாங்கள் போராடுவதாகவோ அல்லது துன்பப்படுவதாகவோ உணர்வதாக ஒரு புதிய ஆய்வு கண்டறிந்துள்ளது. அத்துடன், வேலைக்கு செல்பவர்களில் 14% ஊழியர்கள் மட்டுமே தங்கள் வாழ்க்கையில் வளர்ச்சி அடைவதை உணர்வதாகவும் தெரிவிக்கப்படுகின்றனர்.



Gallup 2024 ஸ்டேட் ஆஃப் தி க்ளோபல் ஒர்க்ப்ளேஸ் என்ற நிறுவனம், உலகெங்கிலும் உள்ள ஊழியர்களின் மன ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வை ஆய்வு செய்து ஓர் அறிக்கையை வெளியிட்டுள்ளது.

இந்த ஆய்வில் ஊழியர்களின் பதிலை அடிப்படையாகக் கொண்டு அவர்கள் மூன்று நிலைகளில் வகைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இந்த அறிக்கையின் அடிப்படையில் இந்தியாவில் பெரும்பாலான ஊழியர்கள் ஒரு சிக்கலான மனநிலையில் இருக்கின்றனர் என்பது தெரியவந்துள்ளது. அதாவது வேலைக்கு செல்பவர்களில் 86 வீதமானோர் தாங்கள் போராடுகிறோம் அல்லது துன்பப்படுகிறோம் என்ற மனநிலையிலேயே இருக்கின்றனர். செழித்து வளர்கிறோம் என்பது, தங்களுடைய தற்போதைய வாழ்க்கை நிலையை 7 அல்லது அதற்கு மேல் மதிப்பீடு செய்தவர்களும், அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு நம்பிக்கையான கண்ணோட்டத்தை கொண்டிருப்பவர்களும் வளர்ந்து வருகிறோம் என்ற நிலையில் கொண்டுவரப்பட்டுள்ளனர்.

போராடுகிறோம் என்பது அதிகரித்த மன அழுத்தம் மற்றும் நிதிக் கவலைகளுடன், அவர்களின் தற்போதைய சூழ்நிலைகள் குறித்து நிச்சயமற்ற அல்லது அவநம்பிக்கை கொண்ட நபர்களை குறிக்கிறது. துன்பப்படுகிறோம் என்பது அவர்களின் தற்போதைய வாழ்க்கை நிலையை 4 அல்லது அதற்கு மேல் மோசமானதாக மதிப்பீடு செய்தவர்களும் மற்றும் எதிர்காலத்திற்கான அவ நம்பிக்கையான கண்ணோட்டத்தைக் கொண்டவர்கள் ஆகும்.

மேலும், தங்கள் வாழ்க்கை மற்றும் வாய்ப்புகள் குறித்து நம்பிக்கையற்றவர்களாகவும், பெரும்பாலும் அடிப்படைத் தேவைகள் இல்லாதவர்களாகவும், கடுமையான உடல் மற்றும் மன உளைச்சலை அனுபவிப்பவர்களைக் குறிக்கிறது.

புதுடெல்லி

# மின்னணு இயந்திரம் ஒரு கருப்புப்பெட்டி

மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் தொழில்நுட்பங்கள் மூலம் முறைகேடு செய்ய முடியும் என்று மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களுக்கு எதிராக டெஸ்லா நிறுவனர் எலான் மஸ்க் கருத்து தெரிவித்துள்ளார். எலான் மஸ்க்கின் கருத்துக்கு ராகுல் காந்தி ஆதரவு தெரிவித்துள்ளார்.




இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில்,

இந்தியாவில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் என்பது ஒரு கருப்புப்பெட்டி. இந்தியாவில் மின்னணு வாக்கு இயந்திரத்தை ஆராய்வதற்கு யாரும் அனுமதிக்கப்படுவதில்லை. தேர்தல் நடைமுறையில் வெளிப்படைத்தன்மை இல்லை என்று புகார்கள் எழுந்துள்ளன. நமது தேர்தல் நடைமுறையின் வெளிப்படைத்தன்மை குறித்து தீவிர கவலைகள் எழுப்பப்படுகின்றன. அமைப்புகள் பொறுப்பேற்க முடியாத நிலையில், ஜனநாயகம் ஏமாற்று நாடகமாக மாறி மோசடிக்கு ஆளாகிறது என பதிவிட்டுள்ளார்.

மின்னணு வாக்கு இயந்திரங்களை ஹேக் செய்ய முடியும் என்று எலான் மஸ்க் கூறியிருந்தநிலையில் ராகுல்காந்தி பதிவிட்டுள்ளது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## யூரோ கோப்பை கால்பந்து
# ஜேர்மனி அணி சாதனை வெற்றி

17ஆவது யூரோ கோப்பை கால்பந்து தொடர் ஜேர்மனியில் சனிக்கிழமை (15) ஆரம்பமானது. 24 அணிகள் கலந்துகொண்டுள்ள இந்த தொடரின் முதல் லீக் ஆட்டத்தில் போட்டியை நடத்தும் ஜேர்மனி, ஸ்காட்லாந்துடன் மோதியது.



ஆட்டத்தின் முடிவில் ஜேர்மனி அணி5-1 என்ற கோல் கணக்கில் அபார வெற்றி பெற்றது. இதன் மூலம் யூரோ கால்பந்து வரலாற்றில் தொடக்க ஆட்டத்தில் அதிக கோல்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற முதல் அணி என்ற சாதனையையும் படைத்துள்ளது ஜேர்மனி அணி. இதற்கு முன்னர் 2021ஆம் ஆண்டு தொடரின் ஆரம்ப ஆட்டத்தில் இத்தாலி 3-0 என்ற கோல்கணக்கில் துருக்கியை வீழ்த்தியதே சாதனையாக இருந்தது. இதனை தற்போது ஜேர்மனி முறியடித்துள்ளது. மேலும், பெரிய தொடர்களில் முதல் ஆட்டத்தில் தோல்வியை சந்தித்து வந்த சோகங்களுக்கும் முற்றுப்புள்ளி வைத்துள்ளது ஜேர்மனி அணி. அந்த அணி 2018 மற்றும் 2022 உலகக் கோப்பை தொடரிலும் 2021இல் யூரோ கோப்பை தொடரிலும் தனது தொடக்க ஆட்டத்தில் தோல்வியை சந்தித்து இருந்தது.

சுவிட்ஸர்லாந்து வெற்றி:

‘ஏ’ பிரிவில் நடைபெற்ற மற்றொரு லீக் ஆட்டத்தில் சுவிட்ஸர்லாந்து - ஹங்கேரி அணிகள் மோதின. இதில் சுவிட்ஸர்லாந்து 3-1 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது. அந்த அணி சார்பில் 12ஆவது நிமிடத்தில் க்வாடோ துவாவும், 45ஆவது நிமிடத்தில் மைக்கேல் எபிசரும், 90ஆவது நிமிடத்தில் ப்ரீல் எம்போலோவும் தலா ஒரு கோல் அடித்தனர்.

ஹங்கேரி அணி தரப்பில் 66ஆவது நிமிடத்தில் பர்னபாஸ் வர்கா கோல் அடித்தார்.

# ஒரு ஓட்டத்தில் வெற்றியை தவறவிட்ட நேபாளம்




ஐ.சி.சி.- டி 20 கிரிக்கெட் உலகக் கோப்பை தொடரில் தென் ஆபிரிக்காவுக்கு எதிரான லீக் ஆட்டத்தில் நேபாளம் அணி ஒரு ஓட்டத்தில் வெற்றியை தவறவிட்டது.

ஐ.சி.சி.- டி 20 கிரிக்கெட் உலகக்கோப்பை தொடரில் ‘டி’ பிரிவில் சனிக்கிழமை (15) கிங்ஸ்டவுனில் நடைபெற்ற ஆட்டத்தில் தென் ஆபிரிக்கா - நேபாளம் அணிகள் மோதின.

முதலில் துடுப்பெடுத்து ஆடிய தென் ஆபிரிக்க அணியை 7 விக்கெட்கள் இழப்புக்கு 115 ஓட்டங்கள் என்ற நிலையில் மட்டுப்படுத்தியது நேபாளம் அணி. நேபாளம் அணி 20 ஓவர்களில் 7 விக்கெட்கள் இழப்புக்கு 114 ரன்கள் எடுத்து தோல்வி அடைந்தது.

# துப்பாக்கி சுடுதலில் பல பதக்கங்கள்





15ஆவது சர்வதேச உலக துப்பாக்கி சுடுதல் போட்டியில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்திய வீரர்கள் நாடு திரும்பியுள்ளனர்.

இலங்கை துப்பாக்கி சுடுதல் போட்டியில் பங்குப்பற்றி, 06 தங்கப் பதக்கங்கள், 06 வெள்ளிப் பதக்கங்கள் மற்றும் 06 வெண்கலப் பதக்கங்களை வென்றுள்ளனர்.

உலகின் 12 நாடுகளைச் சேர்ந்த 150 வீரர், வீராங்கனைகள் பங்கேற்ற இந்தப் போட்டி தென்னாப்பிரிக்காவின் புளூஃபோன்டைனில் 03 முதல் 13 வரை நடைபெற்றுள்ளது.

இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த சார்ஜன்ட் புஷ்பகுமார கலந்து கொண்ட போட்டியில் 40க்கு 40 புள்ளிகளைப் பெற்று தங்கப் பதக்கத்தை வென்றுள்ளனர்.

மேலும், புஷ்பகுமார இந்தப் போட்டியில் வெண்கலப் பதக்கத்தையும் வென்றுள்ளனர்.

மேலும், கேப்டன் ஹசங்க 02 தங்கப் பதக்கங்களையும் ஒரு வெண்கலப் பதக்கத்தையும் வென்றுள்ளனர். இது தவிர, 20 வயதுக்குட்பட்ட இலங்கை கனிஷ்ட அணியை பிரதிநிதித்துவப்படுத்தி இப்போட்டியில் கலந்து கொண்ட ரோயல் லியனகே 03 தங்கப் பதக்கங்களையும் 02 வெண்கலப் பதக்கங்களையும், ஜெனித் ரத்நாயக்க வெள்ளிப் பதக்கத்தையும் 02 வெண்கலப் பதக்கங்களையும் வென்றுள்ளனர்.

# சோகத்தில் ரசிகர்கள்



மான்டிநீக்ரோ நாட்டைச் சேர்ந்தவரும் மில்வால் எப்.சி. கால்பந்து கிளப்புக்காக விளையாடுபவருமான கோல் கீப்பர் மதிஜா சர்கிக் (26) உயிரிழந்ததாக கிளப் நிர்வாகம் அறிவித்துள்ளது. இறப்புக்கான காரணம் குறித்த எந்த தகவலும் வெளியாகவில்லை.

இவருடைய இறப்புக்கு பலரும் இரங்கல் தெரிவித்து வருகிறார்கள். இவருடைய இறப்பு கால்பந்து ரசிகர்களை பெரும் சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை, 17 ஜூன் 2024, இல. 08, ஹூணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு -02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.